ஜூலை 2003 ☐ ரூ. 5.00
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



## அயோத்தி:

## ஜெயேந்திரனின் கரசேவை

படிப்பகம்

www.padippakam.com

## பு.மா.இ.மு.வின் போராட்ட எச்சரிக்கை!

# பணிந்தது பேரூராட்சி நிர்வாகம்

மானாமதுரை பேருந்து நிலையத்தில் பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டண கழிவறையின் 'செப்டிக் டேங்க்' இரண்டு மாதங்களுக்கு மேலாக நிரம்பி வழிந்து நாறிக் கொண்டிருந்தது. பொது மக்களும், கழிவறையின் பொறுப்பாளரும் பலமுறை முறையிட்டும் அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, பொது மக்களை அணிதிரட்டி 'செப்டிக் டேங்கை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும்' என்ற கோரிக்கையை பேரூராட்சி நிர்வாகத்தின் முன் வைத்தது. அக்கோரிக்கையுடன், 'செப்டிக் டேங்க் சுத்தம் செய்யப்படாவிட்டால் பேரூராட்சி அலுவலகத்தைக் கழிப்பறையாக மாற்றுவோம்!' என்ற எச்சரிக்கையும் விடுத்திருந்தது.

பு.மா.இ.மு.வின் இந்தக் கோரிக்கையை வழக்கம் போலவே கிடப்பில் போட்டது பேரூராட்சி நிர்வாகம். எனவே, தங்கள் எச்சரிக்கையை மக்களுக்கு நினைவுபடுத்தி அணிதிரட்டும் முகமாக, நகரின் முக்கிய பகுதிகளில் சுவரெழுத்து இயக்கம் மேற்கொண்டது பு.மா.இ.மு. இதைக் கண்டு அரண்டு போன நிர்வாகம் ஜூன் 2-ஆம் தேதிக்குள் கழிவறையைச் சுத்தம் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தது.

அவ்வாக்குறுதியின் அடிப்படையில் ஜூன் 2-ஆம் தேதி வரை பொறுத்துப் பார்த்த பு.மா.இ.மு. தோழர்கள், அதன் பின்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அடுத்த கட்டமாக, தங்கள் எச்சரிக்கையை நடைமுறைப்படுத்தும் விதமாக ஊர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டியும், தட்டிகள் கட்டியும் வீச்சான பிரச்சாரத்தை மேற்கொண்டு மக்களை அணிதிரட்ட தொடங்கினர்.

'நாற்றம் புடுங்குது' என்ற தலைப்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் பேரூராட்சியின் இலட்சணத்தை நாறடிக்கத் தொடங்கியதும், வேறு வழியின்றி அன்று இரவு 'செப்டிக் டேங்க்' சுத்தம் செய்யப்பட்டது. இதைக் கண்ட ம.தி.மு.க.வைச் சேர்ந்த பேரூராட்சி தலைவர் தீனதயாளன், "நானும் ஒரு மாதமா சொல்லி பார்த்துட்டேன்; எவனும் செய்யல; இப்ப பு.மா.இ.மு.வின் போராட்ட அறிவிப்பைக் கேட்டாலே பயப்படுறானுங்க!" என்று கூறி பு.மா.இ.மு. தோழர்களைப் பாராட்டினார்.

பிச்சை எடுக்கும் போராட்டம், மொட்டை அடித்துப் போராட்டம், கோவணம் கட்டி போராட்டம் என்று போராட்டங்களைக் கேலிக் கூத்தாக மாற்றி வரும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம் முதலான போலி கம்யூனிஸ்டு அமைப்புகளுக்கு மத்தியில், அதிகார வர்க்கத்தை நிர்பந்தத்துக்கு உள்ளாக்கிய பு.மா.இ.மு.வின் போராட்டம் உழைக்கும் மக்களிடம் நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது.

*தகவல்: பு.மா.இ.மு., மானாமதுரை.*

# பொடா சட்டம், எஸ்மா சட்டம், ஈராக் போர் எதிர்ப்பு கருத்தரங்கம்

பொடா சட்டம், எஸ்மா சட்டம் (அத்தியாவசிய பணிகள் பாதுகாப்புச் சட்டம்), ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் மேலாதிக்கப் போர் ஆகிய வற்றைக் கண்டித்து, கடலூர் மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் விருத்தாச்சலத்தில் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. கடந்த மே மாதம் 31-ஆம் தேதியன்று நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு வழக்குரைஞர் முகமது கவுஸ் தலைமையேற்றார்.

அறிமுக உரையாற்றிய மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலின் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் சி. ராஜு, பொடா சட்டம், எஸ்மா சட்டம், ஈராக் மீதான அமெரிக்கப் போர் இவை மூன்றுமே சட்டரீதியான அரசு பயங்கரவாதமே! என்பதை அம்பலப்படுத்தினார்.

தற்போது போலீசு கண்காணிப்பாளராகப் பணி புரிந்து வரும் பிரேம்குமார், இருபது ஆண்டுகளுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டியில் துணை ஆய்வாளராகப் பணியாற்றிய பொழுது, நல்லகாமன் என்ற முன்னாள் இராணுவ வீரரை சட்ட விரோதமாகத் தாக்கி, தெருவில் ஊர்வலமாக இழுத்துச் சென்று அவமானப்படுத்தினார். மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிய இக்காவல்துறை காட்டுமிராண்டியைத் தண்டிக்கக் கோரி கடந்த இருபது ஆண்டுகளாக சட்டவழியில் போராடி வருகிறார் நல்லகாமன். தனிநபராக நின்று தன்மானத்தை விட்டுக் கொடுக்காமல் போராடி வரும் நல்லகாமனை இக்கூட்டத்தில் அறிமுகப்படுத்தினார் வழக்குரைஞர் ராஜு.

கர்நாடக உயர்நீதி மன்ற வழக்குரைஞர் பாலன், பொடா சட்டத்தில் எது பயங்கரவாதம்? யார் பயங்கரவாதி? என்பது தெளிவாக வரையறுக்கப்படவில்லை என்றும், தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் - விவசாயிகள் வீதிக்குத் துரத்தப்பட்டுள்ளனர்; இதுதான் பயங்கரவாதம், இதற்கு காரணமான அரசியல்வாதிகள்தான் பயங்கரவாதிகள் என்றும், பகிரங்கமாக ஆயுதப் பயிற்சி, ஆயுத விநியோகம் செய்து வரும் சங் பரிவார் அமைப்புகளைச் சேர்ந்த யாரும் இதுவரை பொடா சட்டத்தில் கைது செய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு பேசினார்.

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்வெறியை அம்பலப்படுத்தியும், இப்போர் அமெரிக்காவில் உள்ள 200 பெரும் வர்த்தக நிறுவனங்கள் உலகையே சுரண்ட நடத்தப்பட்ட போர் என்றும், இதற்கெதிராக உலக மக்கள் அனைவரும் போராடி வருகின்றனர்; நாமும் போராட வேண்டும்; அதற்கு இது போன்ற கருத்தரங்குகள் மக்களிடம் விழிப்புணர்வை விதைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். கருத்தரங்கில் வழக்குரைஞர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




*தகவல்: மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில், கடலூர் மாவட்டம்.*



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 9**

ஜூலை 2003

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# சமூக விரோதிகளின் கூடாரமாக சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்

கல்வி, குறிப்பாக உயர் கல்வி - தொழில் கல்வி தனியார்மயம் - தாராளமயமாவதனால் விளையும் சமூகப் பாதிப்புகள் - கேடுகள், அவலங்கள் - அசிங்கங்கள் பெரும் அளவில் வெளிச்சத்துக்கு வந்து நாடே நாறத் தொடங்கிவிட்டது. சமீப ஆண்டுகளில் பொறியியல் - தொழில்நுட்பக் கல்லூரிகள், துணை மருத்துவத் துறைக் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்விக் கூடங்கள், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் என்று நூற்றுக்கணக்கில் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையில் அவை, சுயநிதியோ, சமூக சேவை நோக்கமோ கொண்டவையாக இல்லை. முதன்மையாக அ.தி.மு.க., பா.ஜ.க., காங்கிரசு போன்ற ஆளும் கட்சிகளைச் சேர்ந்த திடீர் பணக்கார அரசியல் பிழைப்புவாதிகள், கிரிமினல் குற்றவாளிகள், போலி பீடாதிபதிகள் இலஞ்ச ஊழல் மோசடிகள் மூலம் ஈட்டிய நிதியை ஆரம்ப மூலதனமாகப் போட்டு பெற்றோர்களையும் மாணவர்களையும் கொள்ளையடிப்பதற்கான தொழில்களாகத் தொடங்கப்பட்டவை.

கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கான கட்டிடங்களோ, ஆய்வு - பயிற்சிக் கூடங்களோ, நூலகங்கள் - ஆசிரியர்களோ கூட இல்லாமல், தரகர்களைக் கொண்டு லட்சக்கணக்கான ரூபாய் நன்கொடைகள், சிறப்புக் கட்டணங்கள் வசூலித்துக் கொண்டு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். அதன் பிறகுதான் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளிடமிருந்து பல்வேறு முறைகேடுகள், விதி மீறல்கள் செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு "குடி, குட்டி லஞ்சம் கொடுத்து" அங்கீகாரமே பெறப்படுகின்றது. பிறகு அதேவழியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் அரசு நிலத்தை வளைத்துப் போட்டு, மாணவர்களிடம் கொள்ளையடிக்கப்படும் நிதியைக் கொண்டு ஒரு பகுதியளவு கட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. பல்வேறு வகை நன்கொடைகள், சிறப்புக் கட்டணங்கள், போக்குவரத்து, தங்கும் விடுதி, சீருடை, புத்தகங்கள், அபராதங்கள் என்று மிகுதியான தொகை கட்டாயமாக வசூலித்து கோடிகோடியாக இலாபமீட்டுகின்றனர். கல்வி - சேவை நிறுவனங்கள் என்கிற பெயரில் பல்வேறு அரசு சலுகைகள் பெறுகின்றனர். வெளிநாட்டு கம்பெனிகள், அரசுகளோடு ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு ஆதாயம் அடைகின்றனர். அறக்கட்டளைகளின் பெயரால் கல்வி நிறுவனங்களை நடத்துவதால் பல்வேறு வரி மோசடிகளும், இறக்குமதிச் செலவுகளும், மானியங்களும் பெறுகின்றனர். கல்வி நிறுவனக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி சம்பந்தமில்லாத பல்வேறு தொழில்களும் செய்கின்றனர். கல்வி நிறுவன நிர்வாகிகள் என்கிற தகுதியை வைத்து அரசியல், சமூக வாழ்வில் பல பதவிகளையும் அடைகின்றனர்.

இவற்றைவிட முக்கியமாகப் விபச்சாரம், பாலியல் வன்முறை, சாதி ஒடுக்குமுறை, கொலைகள் எனப் பல சமூக விரோத கிரிமினல் குற்றங்களுக்கும் கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்துகின்றனர். போலீசு, அரசியல்வாதிகளின் ஒத்துழைப்போடு இத்தகைய குற்றங்கள் புரிந்துவிட்டு தண்டனையின்றித் தப்பித்துக் கொள்கின்றனர். "மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது" என்ற காரணத்தைக் காட்டி அரசும் இவர்களோடு ஒத்துழைக்கிறது. கவுன்சிலிங் முறை, ஒற்றைச் சாளர முறை என்று பல்கலைக்கழகங்கள் மூலம் மாணவர் சேர்க்கையை நடத்துவதால், இவர்களின் முறைகேடுகளுக்கு அரசே உடந்தையாக இருக்கிறது. பாதிக்கப்படும் மாணவர்களின் கல்விக்கு மாற்று ஏற்பாடும் தகுதியில்லாத நிறுவனங்களுக்கும் அங்கீகாரமும் வழங்கும்படி நிர்பந்திக்கப்படுகின்றது.

சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் அட்டூழியங்களைச் சகித்துக் கொள்ள முடியாத மாணவர்கள் வேலை நிறுத்தம், பல்கலைக்கழக முற்றுகை, முறையீடு என்று கிளம்பியுள்ளனர். பரிசீலனை, விசாரணை என்று அரசு இழுத்தடிக்கிறது. அதேசமயம் மாணவர் சேர்க்கையில் தகுதி நிர்ணயம், இட ஒதுக்கீடு போன்றவற்றில் மேலும் மேலும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களோடு அரசு ஒத்துழைக்கிறது. போதாக் குறைக்கு மருத்துவக் கல்வியிலும் தனியார்மயமாக்கலை அரசு வேகப்படுத்தியிருக்கிறது. ஜெயலலிதா அரசு, சங்கராச்சாரி, ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் என்று தனது சாதி - கட்சி நலன் கருதி, தனியார்மயமாக்கலை எதிர்த்துப் போராடிய மருத்துவக் கல்லூரி மாணவர்கள், அரசு மருத்துவர்கள் போராட்டத்தை அடக்கி ஒடுக்கியது. ஏழை எளிய மக்களின் கல்வி உரிமையை மறுக்கும் வகையில் அரசே தனது கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைப்பது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, அதனிடமிருந்து நீதி கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்க்க முடியாது. எனவே, தற்போதைய தேவை சுயநிதிக் கல்வி நிறுவனங்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்து, அவற்றை அடியோடு மூடும் வகையில் ஒரு பெருந்திரள் போராட்டம் அவசியமாகியிருக்கிறது. ❑

படிப்பகம்

www.padippakam.com

# பாமரர்களின் பக்தியே ஆர்.எஸ்.எஸ்.-இன் அடித்தளம்!

தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை வேரூன்றச் செய்வதற்கு அதன் நிறுவனத் தலைவர் ஹெட்கேவார், மராத்திய சித்பவனப் பார்ப்பன கும்பல் ஒன்றை அனுப்பி வைத்து அறுபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் பொருத்தவரை, *"1980-இன் ஆரம்பம் வரை மிகவும் பலவீனமான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்தது. ஆனால் இன்று, சங்கம் மிக வேகமாக வளரும் பிராந்தியங்களில் ஒன்றாக இது இருக்கிறது. அதோடு சங்கத்தின் சகோதர அமைப்புகள் அனைத்தினது வேலையும் நல்ல முன்னேற்றகரமானதாக உள்ளது. எங்கும் இந்து வேட்கை பற்றிக் கொண்டு வருகிறது. உண்மையில் இது ஒரு திருப்புமுனையாக இருக்கிறது."* (தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து எழுச்சியின் கதை, ஆர்.எஸ்.எஸ். வெளியீடு, பக். 4-5)

*"உடைப்பதற்குக் கடினமான ஒரு கொட்டையாகத் தமிழ்நாடு உள்ளது" என்று ஆர்.எஸ்.எஸ்.-ன் பொதுச்செயலாளராக இருந்த தேவராஸ் சித்தரித்தார்; அந்தக் கொட்டை உடைபட உடன்படுவதாகத் தெரிந்தது. 1980-81-இல் ஏராளமான புதிய குழுக்கள் பல புதிய இடங்களில் செயல்படத் தொடங்கின. அப்போதுதான் சங்கத்தின் வேலையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது"* என்று ஆர்.எஸ்.எஸ். கூறிக் கொள்கிறது.

1939-ஆம் ஆண்டு தாதாராவ் பரமார்த் என்பவரும் அவரைத் தொடர்ந்து, அதன்பிறகு பதினைந்துக்கும் மேற்பட்ட மராத்திய சித்பவன பார்ப்பனர்களும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நிறுவுவதற்காக அனுப்பப்பட்டனர். இங்குள்ள ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்த சில பார்ப்பன வழக்கறிஞர்களும், பார்ப்பனர்களாகத் தமக்குத் தாமே கருதிக் கொள்ளும் சௌராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த சில பிரமுகர்களும் மட்டுமே அவர்களுக்குப் புகலிடம் கொடுத்தனர். 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் எதையும் அவர்களால் சாதிக்க முடியவில்லை.

*"தற்போதைய நிலவரப்படி, (பெருநகரங்கள், நகரங்கள் மற்றும் கிராம அளவில்) 1400 இடங்களில் ஆர்.எஸ்.எஸ். குழுக்கள் அன்றாடம் கிரமமான பயிற்சியில் ஈடுபடுகின்றன. அதோடு, வாராந்திர, மாதாந்திர கூட்டங்கள் 400 இடங்களில் நடக்கின்றன. மேலும் 2000 பிற கிராமங்களில் முறைப்படியான தொடர்புகள் உள்ளன. அர்ப்பணிப்புமிக்க 146 ஆர்.எஸ்.எஸ். முழுநேரப் பிரச்சாரகர்களோடு எல்லாத் தோழமை அமைப்புகளும் சொந்த முழுநேர ஊழியர்களைப் பெற்றிருக்கிறது."* (மேற்படி நூல், பக்.32)

அதாவது, கடந்த 20 ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் பிரமிக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளன. இதற்கு என்ன காரணம், இது எப்படி சாத்தியமானது என்பது ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மற்றும் அதன் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, அதன் எதிர்ப்பாளர்களும் கவனிக்கத்தக்கது.

ஆர்.எஸ்.எஸ்.-இன் அரசியல் பிரிவாகிய பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டு ஏற்படுத்திக் கொள்ளும் வரை தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு கருத்துக் கூறி வந்தார். தமிழ்நாட்டில் இந்துமத வெறிச் சக்திகள் தலைதூக்கியதற்கு, ஜெயலலிதாதான் காரணம்; பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு அதோடு மத்திய அரசில் ஜெயலலிதா அரசு பங்கேற்றதுதான் இதற்குக் காரணம் என்று கூறி வந்தார். பின்னர் அக்கூட்டை முறித்துக் கொண்டு மத்திய அரசில் இருந்து ஜெயலலிதா விலகியபோது, அதையும் குறைகூறிய கருணாநிதி, "மத்தியில் நிலையான ஆட்சி, வாஜ்பாயி நல்லவர் - தவறான இடத்தில் இருக்கிறார்" என்று கூறி அதே பா.ஜ.க.வுடன் கூட்டணி போட்டு, மத்திய அரசிலும் பங்கேற்றார். அதன் பிறகும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பார்ப்பனர்கள் தமது சாதிப் பாசத்தோடு ஜெயலலிதாவுக்கு விசுவாசிகளாக செயல்படுகின்றனர். ஆனாலும் மத்திய பா.ஜ.க. வேறு; ஜெயலலிதா ஆதரவு இந்து முன்னணி - பா.ஜ.க.வினர் வேறு என்றெல்லம் பூசி மெழுகுகிறார் கருணாநிதி. பெரியார், அண்ணா, திராவிடக் கட்சி என்றெல்லாம் கூறிக் கொண்டு ஜெயலலிதா பகுத்தறிவிற்கு விரோதமாகச் செயல்படுவதாக அவ்வப்போது அறிக்கை விடுகிறார், கருணாநிதி.

இவ்வாறு ஆர்.எஸ்.எஸ். - இந்து மதவெறியர்கள் தமிழகத்தில் தலைதூக்கியதற்கு ஜெயலலிதாவைக் கருணாநிதி குறைகூறும் அதேசமயம், ஜெயலலிதா ஒரு மதச்சார்பற்ற சக்தி என்று கொண்டாடி காங்கிரசு - கம்யூனிஸ்டுக் கட்சிகள் அவரோடு கூட்டணி போட்டு ஆட்சியிலும் அமர்த்தினர். இப்போது, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மதவெறிச் சக்திகளுடன் கருணாநிதி - ஜெயலலிதா ஆகிய இருவருமே கூட்டு வைத்திருக்கின்றனர்; இந்த இருவருமே இங்கே அச்சக்திகள் தலைதூக்க உதவியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். பல்வேறு தமிழினக் குழுக்களும் "தலித்" குழுக்களும் கூட இதே காரணத்தைத்தான் கூறுகின்றன.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் வேரூன்றி, ஒரு சக்தியாக வளர்ந்துவிட்ட நிலையில் ஜெயலலிதா - கருணாநிதி ஆகிய இருவரும் மாறிமாறி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. இயக்கத்தோடு தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது, அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியி

**ஆர்.எஸ்.எஸ். கொலைகாரர்களின் பயிற்சி கூடாரமாகும் கோயில்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

ருக்கிறது. மற்றபடி இதுதான் முதன்மை யான, முழுமையான காரணம் என்று கூறுவது உண்மையல்ல.

''1985-ஆம் ஆண்டு, நாகர் கோயிலில், இந்து எழுச்சிக்கான மாவட்ட மாநாடு நடந்தது. சுமார் 25 ஆயிரம்பேர் கலந்து கொண்ட பேரணி நடந்தது. ''இது எமது தாய்நாடு, இது எங்கள் தேசம், இந்து தேசம்'' என்று ஊர்வலத்தினர் முழக்கமிட்டனர். அதைக் கண்டுகளித்த, ஆர்.எஸ்.எஸ்.-இன் தென்நாட்டுப் பொறுப்பாளர் யாதவராவ் ஜோஷி உணர்ச்சிவசப்பட்டு, கண்களில் கண்ணீர் பொங்கக் கூறினார், ''தமிழ் நாட்டிலிருந்துதான் இந்து ராஷ்டிரம் மீண்டும் நிறுவப்படும்.'' 1990-ஆம் ஆண்டு கோவையில் ஒரு மாநில இந்து எழுச்சி மாநாடு நடந்தது. 40 ஆயிரம் பேர் கலந்து கொண்ட பேரணி நடந்தது. ''இந்து தர்மம், இந்து சமூகம் காப்போம்'' என்று முழங்கியவாறு அணிஅணியாக ஊர்வலம் போனதைக் கண்ட, ஆர்.எஸ்.எஸ்-இன் தொழி லாளர் அணித் தலைவர் தோட்டபந்த தேங்கடி ஆனந்தக் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியாமல் திண்டாடினார். கடி னமான தமிழக மண்ணில் மிகவும் சிர மமான அந்த நாட்களில் மேற்கொண்ட தமது தவத்தின் பலனை அந்த இரு மூத்த பிரச்சாரர்களும் அப்போது அனு பவித்து உணர்ந்தனர்'' (மேற்படி நூல். பக். 25-26) என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

1975-இல், அவசரநிலை ஆட்சிப் பிரகடனத்துக்கு சற்றுமுன்பு, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை மத்திய அரசு தடை செய்ய எண்ணியது; அப்போது, தமிழ்நாட்டை ஆண்ட கரு ணாநிதி அரசு, ''தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். என்பதே இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் அது ஒரு பொருட்டாகக் கருதத்தக்க அளவுகூட கிடையாது'' என்று அறிக்கை அனுப்பி யது. ஆனால், அதே கருணாநிதி 1984-இல் மன்னார்குடிப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது, ''ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கொன்று அங்கொன்று என்று அரிதாகவே ஆர்.எஸ்.எஸ்.-ஐக் காண முடிந்தது. ஆனால் இப்போது அது எங்கும் எல்லா இடங்களிலும் வளர்ந்துவிட்ட தாகத் தெரிகிறது. பகுத்தறிவாளர்க ளான ஈ.வெ.ரா.வும் அண்ணாவும் பிறந்த மண்ணில் ஆர்.எஸ்.எஸ்.-க்கு இடமில்லை என்று நாம் எண்ணினோம். ஆனால் இப்போது, அம்மாதிரியான மண்ணில் ஆர்.எஸ்.எஸ். கோட்டைகள் உள்ளன'' என்று குறிப்பிட்டார்.

ஒரு 40 ஆண்டு காலம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இந்தத் தமிழ் மண்ணில் வேரூன்ற முடியாமல் தடு மாறி இருக்கிறது. அதன் பின்னர் சில திருப்பு முனைகள் ஏற்பட்டு வேகமான வளர்ச்சி கண்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுடன் ஜெயலலிதாவும் கரு ணாநிதியும் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டதுதான் என்று பார்ப்பது மேலோட்டமான பார்வை. அதே போல, ஆர்.எஸ்.எஸ். அமைப்பா ளர்கள் இந்த மண்ணில் தவமிருந்ததன் பலன் என்று கூறுவது ஒரு புனிதப் போர்வை போர்த்தும் செயல்.

ஆனால், ஆர்.எஸ எஸ்.காரர்க ளுக்கு உண்மை நன்றாகவே தெரியும். பெரியார் தலைமையிலான பகுத்தறிவு



தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நிறுவுவதற்காக அனுப்பப்பட்ட மராத்திய சித்பவன் பார்ப்பனர் தாதாராவ் பரமார்த்.

-சுயமரியாதை இயக்கம்தான் ஆர்.எஸ்.எஸ். இந்த மண்ணில் வேரூன்றித் தழைப்பதற்கு பெருந் தடையாக இருந்தது என்பதை அறி வார்கள். இதை இந்து, சடங்கு - சாத்தி ரங்கள், இந்தி, பார்ப்பனியம், சமசுக்கி ருதம், இதிகாசம் - புராணங்கள் ஆகிய வடக்கிலிருந்து வந்தவை அனைத் தையும் புறக்கணிக்கும்படி நடத்தப் பட்ட வெறுப்பு இயக்கம் என்று அவர்கள் சித்தரிக்கிறார்கள்.

''சுதந்திரத்திற்குப் பிறகுதான் திரா விட சக்திகள் அதிவேகமாக வளர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள் என்றாலும், நாடு சுதந்திரம் அடைவ தற்கு முன்பே கூட அவர்களின் நச்சுத் தன்மையுடைய பாதிப்பு தெரிந்தது. இந்து சமூகத்தை பிராமணர்கள் - பிரா ணர்கள் அல்லாதவர்கள் என்று பிளவு படுத்துவதன் மூலம் இந்துக்களுக்கு எதிரான ஒரு பாதகமான பொதுச் சூழல் உருவாக்கப்பட்டது. எல்லா தேசியக் கருத்துக்களுக்கும் எதிரான ஒரு வெறுப்புச் சூழல் கட்டியெழுப்பப் பட்டிருந்தது. இந்தப் பொது வெறுப் பான சூழல்தான் ஆர்.எஸ்.எஸ். குறித்து மக்கள் புரிந்து கொள்ள முடி யாமல் தடுத்தது. திராவிடர்கள் மீது இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணித்து, திராவிடக் கலாச்சாரத்தை அழிக்கும் இயக்கம்தான் வடக்கில் இருந்து வந்த பார்ப்பனர்களின் ஆர்.எஸ்.எஸ். என்று அதன் எதிர்ப்பா ளர்கள் முத்திரை குத்தினார்கள்.

''இதோடு 1948, ஜனவரி 30-இல் நடந்த மகாத்மா காந்தியின் துரதிருஷ் டவசமான கொலையும் சேர்ந்து கொண்டது. சங்கம்தான் இந்தக் கொலைக்கு பொறுப்பு என்ற பொய்யான குற்றச்சாட்டை முன் வைத்து பிப்ரவரி 4-ஆம் தேதி அர சாங்கம் ஆர்.எஸ்.எஸ்.-இன் நடவடிக் கைகளுக்குத் தடை விதித்தது. இந்தப் பொய்யான குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்பக் கூறும் காங்கிரசு மற்றும் பிற அரசியல் கட்சிகளின் கெட்ட நோக்கம் கொண்ட பிரச்சாரம் 1948-க்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ் வளர்ச்சிக்குப் பிற மாநி லங்களைப் போலவே தமிழ்நாட்டிலும் தடைகளாக அமைந்தன.'' (மேற்படி நூல், பக். 7)

இவ்வாறு, ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இந்த மண்ணில் வேரூன்றி வளர்வதற் குரிய தடைகளைச் சரியாகவே அடை யாளம் காண்கிறது. அதேசமயம் பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனியத் துக்கு எதிர்ப்பு என்பது அனைத்து சாதி இந்துக்களுக்கும் எதிரானது; இந்து மதத்திற்கு எதிரானது, இந்து தேசத் திற்கு எதிரானது; இந்த நாட்டுக்கே எதி ரானது என்று வியாக்கியானம் செய்கி றது. இப்படிச் செய்வதன் மூலம், ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தன்னை பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனியத் தோடு பகிரங்கமாக அடையாளப்ப டுத்திக் கொள்கிறது. அதோடு பார்ப்பன எதிர்ப்பு என்பதை ஒட்டு மொத்தமாக நாடு - தேசம், அதன் சமூகம், மொழி, பண்பாடு எல்லாவற் றுக்குமே எதிரானது என்பதாக விரித்து வியாக்கியானம் செய்வதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் உண்மையில் யாருடைய நலனுக்கானது என்பதை மூடி மறைக்கவும் செய்கிறது.

''பித்தலாட்டக்காரர்களின் கடைசிப் புகலிடம் தேச பக்தி'' என்றொரு முதலாளிய அறிஞர்


படிப்பகம்

www.padippakam.com

# கல்வி தனியார்மயமாவதைக் கண்டித்து புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்


திருச்சியில்



துறையூரில்

**எ**ண்பதுகளில் கல்வித் துறையில் தொடங்கிய தனியார்மயம், இன்று உலகமயத்துடன் இணைந்து உச்சக்கட்டத்தை எட்டிக் கொண்டுள்ளது. பை நிறைய புத்தகத்தைச் சுமந்து சென்றால் மட்டும் போதாது. பை பையாக பணத்தையும் அள்ளிச் சென்றால்தான் இனி படிக்க முடியும். அறிவியல் முதல் தொழில் சார்ந்த கல்வி வரை அனைத்தும் கொள்ளை இலாபத்துக்கான சரக்காகி விட்டது. உழைக்கும் ஏழை மக்களை மட்டுமல்ல; நடுத்தர வர்க்கப் பிள்ளைகளுக்கே கல்வி இப்போது வெறும் கனவாகி விட்டது.

பொறியியல் கல்லூரியில் பணம் கட்டி சேர்வதற்கான அதிகபட்சக் கட்டணம் ரூ. 35,000/- என அரசு அறிவித்திருந்தாலும், கல்லூரிக்கு ஏற்ப 2 லட்சத்திலிருந்து 8 லட்சம் வரை விற்பனையாவதைப் பார்ப்பன பத்திக்கைகளே கூட அம்பலப்படுத்துகின்றன. கல்விக்கான கட்டணத்தைத் தாறுமாறாக உயர்த்தியுள்ள அதேவேளையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கி வந்த கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கடன்களை நிறுத்தியும், அரசு பராமரித்து வந்த விடுதிகளைத் தனியாரிடம் ஒப்படைத்தும், இலவச பஸ் பாஸை ரத்து செய்தும் இனி காசு இல்லாதவனுக்கு கல்வி கிடையாது என்னும் புதிய மனுதர்மம் அமுல்படுத்தப்படுகிறது.

உலக வங்கி கைக்கூலி பாசிச ஜெயா அரசின் இக்கல்வி கொள்கையை எதிர்த்து, மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் -இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன. துண்டு பிரசுரங்கள் விநியோகம், சுவரொட்டி, தட்டிகள் மூலமும், தெருமுனைக் கூட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதன் மூலமும் தமிழகத்தில் மேற்கண்ட அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் மக்களை அணிதிரட்டி வருகின்றன.

**திருச்சியில்** ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து ஜங்சன் காதி கிராப்ட் எதிரில் கடந்த 17.6.03 அன்று காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின. ஆர்ப்பாட்டத்துக்கு ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்பு சங்க செயலாளர் தோழர் முருகேசன் தலைமையேற்றார். தோழர் சேகர், தோழர் செல்வராஜ், தோழர் சிவா, தோழர் ராஜா ஆகியோர் கல்வி மற்றும் மின்கட்டண உயர்வைக் கண்டித்தும், தமிழக அரசின் மக்கள் விரோதப் போக்கை அம்பலப்படுத்தியும் உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்திற்கு திரளான மக்கள் கூடி ஆதரவு தெரிவித்தனர்.

**துறையூரில்** வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 19.6.03 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி கல்வி, மின்கட்டண உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியது. வி.வி.மு. தோழர் பொ.செழியன் தலைமை தாங்க, தோழர் பழனியாண்டி, தோழர் மணி, தோழர் சேகர், தோழர் ராஜா ஆகியோர் உரையாற்றினர்.

தங்களின் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த பெற்றோர்களுக்கும், விவசாய மானியங்கள் ரத்து, இலவச மின்சாரம் ரத்து செய்ததன் மூலம் இரு கண்களும் பிடுங்கப்பட்ட விவசாயிகளுக்கும், அரசுக்கு எதிராக எப்படி போராடினால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையையும், போராட்ட உணர்வையும் தூண்டுவதாக இந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது.

**சென்னையில்** மெமோரியல் ஹால் முன்பு ஜூன் 20-ஆம் தேதி தோழர் வெங்கடேசன் தலைமையில், ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் உரையுடன் கண்டன ஆர்ப்பாட்டத்தை ம.க.இ.க. நடத்தியது. ஆர்ப்பாட்டத்தில் பாசிச ஜெயா அரசுக்கு எதிராக போடப்பட்ட முழக்கங்களும், ஜெயா மட்டுமல்ல, எல்லா ஓட்டுக் கட்சிகளுமே உலக வங்கியின் எடுபிடிகள்தான் என்பதை அம்பலப்படுத்திய தோழரின் உரையும் மக்களின் கவனத்தை ஈர்த்தன.

---

ஜான்சன் கூறினார். ஆர்.எஸ்.எஸ். போன்ற பாசிச பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு இது முழுமையாகப் பொருந்தும். பார்ப்பன மற்றும் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது நாட்டிற்கு தேசத்திற்கு எதிரான துரோகம் என்று சித்தரிப்பதன் மூலம் நாட்டுப்பற்று - தேசப்பற்று என்பதைக் கேடாகப் பயன்படுத்துவதைத் தமது மூல உத்தியாகக் கொண்டிருக்கிறார்கள். அதாவது தேச துரோக முத்திரை குத்தி தனது எதிராளிகளை ஒழிப்பது எளிய வழிஎன்று கண்டுள்ளனர். இதோடு கூடவே தனக்கு எதிரானவற்றை அந்நிய ஊடுருவல், அந்நிய ஆக்கிரமிப்பு, அந்நிய சதி என்று முத்திரை குத்தி தேசிவெறியூட்டுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதே முறையில்தான், பார்ப்பன எதிர்ப்பு பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கத்தையும் ''ஆங்கிலேய ஆட்சியாளர்களின் திட்டமிட்ட சதி, பிரித்தாளும் சூழ்ச்சி'', ''பிரிவினைவாத - தேசதுரோக சக்தி'' என்று அவதூறு செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் வேரூன்றி வளர்ந்துவிட எத்தணித்தது.

*''ஆங்கிலேயர்கள், தங்களுக்கேயுரிய சூழ்ச்சிகரமான முறையில் இந்து சமூகத்தை பிராமணர்கள் - பிராமணர் அல்லாதவர்கள் என்று பிளவு படுத்து*


படிப்பகம்

www.padippakam.com

*வதற்கு நுட்பமாகத் திட்டமிட்டார்கள். அவர்களுக்கிடையே பொருளாதார அடிப்படையிலும் அரசாங்க வேலைகளைக் கைப்பற்றுவதற்கான பந்தயத்திலும் ஆரோக்கியமற்ற போட்டியையும் மோதலையும் உருவாக்கினார்கள். அரசை நடத்துவதில் பிராமணர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்; அவர்களை வெறுக்கும்படி மற்றவர்களைத் தூண்டிவிட்டார்கள். ஆங்கிலேயர்களின் மறைமுக ஆதரவுடன் நீதிக் கட்சி என்கிற பெயரில் பிராமணரல்லாதோரின் கட்சி நிறுவப்பட்டது; அது பிராமணர்களுக்கும், அதன் மூலம் இந்து மரபுகள் - பாரம்பரியங்களுக்கும் எதிரான ஆழமான வெறுப்பைப் பரப்பியது.*

*''பின்னர் இந்தப் போக்கு திராவிட இயக்கத்தைப் பெற்றெடுத்தது. திராவிடர் கழகம் என்றொரு அமைப்பு தொடங்கப்பட்டது. இதோடு கூடவே, இதேசமயம் இந்துக்களையும், அவர்களின் மரபுகள் - பாரம்பரியங்களையும் உண்மையான எதிரிகளாகக் கொண்ட ஒரு பகுத்தறிவு இயக்கம் தொடங்கப்பட்டது. அவர்கள் தென்னாட்டு மக்கள் திராவிடர்கள், இந்துக் கருத்துக்களை அவர்கள்மீது திணிக்கும் பிராமணர்கள் வடநாட்டு ஆரியர்கள் என்று வாதிட்டார்கள்.*

*''இந்த ஆபத்தான சதியில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ள கிறித்தவ சபையும், சேவை நிறுவனங்களும் மிக முக்கியப் பங்காற்றின. தமிழறிஞரான கால்டுவெல் என்ற ஒரு பாதிரியார் பாரதத்தில் ஆரியர் - திராவிடர் என்ற மரபினப் பிளவுக் கோட்பாட்டை முன் வைத்தார். இந்தக் கோட்பாடு ஆங்கிலேயர்கள் பாரதத்தின் மீது படையெடுத்து ஆக்கிரமித்திருப்பதை நியாயப் படுத்தப் பயன்படுத்தப்பட்டது. ஆரியர்கள், துருக்கியர்கள், ஆப்கானியர்கள், மொகலாயர்கள் ஆகிய படையெடுத்து வந்த ஏதாவதொரு குழுவால்தான் இந்த நாட்டின் அரசியல், மதம், அறிவுபூர்வத் தலைமையளிக்க முடிந்தது என்று இந்தக் கோட்பாடு மூலம் நிரூபிக்க முயன்றார்கள். இதில் இந்துக்களைப் பிளவுபடுத்தும் ஆரியன் - திராவிடன் கோட்பாடு மிகவும் விஷமத்தனமானது. (அதேசமயம் பிற படையெடுப்புகள் இந்துக்கள் என்று பிளவுபடுத்தின). இந்த ஆரியன் - திராவிடன் போன்ற மரபினக் கோட்பாடு (இந்தக் கோட்பாடு தவறானது, பொய்யானதென்று இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது; அதை தூக்கிப் பிடித்த சிலரும் கூட இதை ஒப்புக் கொள்கின்றனர்) தமிழ்நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியது. இந்தக் கோட்பாட்டின் தாக்கம் முழுமையாக இருந்தது. ஆரியன் - திராவிடன் என்ற பிளவு தமிழ்நாட்டில் பிராமணர் - பிராமணர் அல்லாதோர் என்ற நிலைப்பாடாக மாறிவிட்டது.''* (மேற்படி நூல், பக். 5-6)



பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சில் நஞ்சை விதைக்கும் இந்துமதவெறிப் பிரச்சாரம்.

ஆர்.எஸ்.எஸ்.-இன் மேற்கண்ட வரலாற்றுத் தொகுப்பு பல பித்தலாட்டங்களைக் கொண்டிருக்கிறது. ''அரசை நடத்துவதற்குப் பிராமணர்களைப் பயன்படுத்திய ஆங்கிலேயர்கள் அவர்களை வெறுப்பதற்கு மற்றவர்களை ஊக்குவித்தனர்'' என்பது ஒரு பித்தலாட்டம். பார்ப்பனர்கள் அரசை நடத்தினார்கள், மற்றவர்கள் அவர்களை வெறுத்தார்கள் என்பதே பார்ப்பனர்களை ஏற்றி வைத்துப் போற்றும் பார்வைதான். ஆங்கிலேயர்களுக்கு ஊழியஞ் செய்வதன் மூலமும் காங்கிரசின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டும் காலனிய அரசின் பதவிகளைப் பார்ப்பனர்கள் ஏகபோகமாக அனுபவித்தனர். அதேவழியைப் பின்பற்றியும், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்கிற அமைப்பு மூலமாகவும் காலனிய அரசில் பதவிகளைக் கைப்பற்றுவதற்கான போட்டியில் இறங்கினர், மேல்சாதி - மேட்டுக் குடியைச் சேர்ந்த மிட்டாமிராசுகளும், ஜமீன்தார் - குறுநில மன்னர்களும். ''அவர்கள் இந்து மரபுகள் - பாரம்பரியங்களுக்கு எதிரான வெறுப்புகளை பரப்பினார்கள்'' என்பது இன்னொரு பித்தலாட்டம். அதற்கு மாறாக சமசுகிருதம் கற்பது, ''இந்து சடங்கு - சாத்திரங்''களைப் போற்றி வளர்ப்பது என்பதில் பார்ப்பனர்களைக் ''காப்பி''யடிப்பதன் மூலம் தமது சமூகத் தகுதியை உயர்த்திக் கொள்ள முயன்றார்கள் என்பதுதான் உண்மை.

திராவிடர் கழகத்தின் தோற்றத்தோடு, அதேசமயத்தில் இந்துக்களுக்கும் அவர்களின் மரபுகள் - பாரம்பரியங்களுக்கும் எதிரான பகுத்தறிவு இயக்கம் தொடங்கப்பட்டதாகக் கூறுவது இன்னொரு பித்தலாட்டம். திராவிடர் கழகம் தொடங்குவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே சுயமரியாதை இயக்கம் தோன்றிவிட்டது என்பதுதான் உண்மை. தமது வசதிக்குத் திரித்து வரலாற்றுத் தொகுப்பு செய்தபோதும், தமிழகத்தில் பார்ப்பன எதிர்ப்பும், பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கமும் ஏற்படுத்தியிருந்த தாக்கம்தான், பார்ப்பன பாசிச பயங்கரவாத - இந்துமதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ். இங்கு வேரூன்றி வளர்வதற்கான தடையாக அமைந்தது என்று சரியாகவே அடையாளங் கண்டுள்ளனர்.

பா.ஜ.க.வுடன் ஜெயலலிதாவும் கருணாநிதியும் மாறிமாறித் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. இயக்கம் தமிழ்நாட்டில் தலைதூக்கியதற்கு எப்படி முதன்மையான, முழுமையான காரணமில்லையோ அதைப் போலவே, பார்ப்பன எதிர்ப்பையும் பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கத்தையும் திராவிடக் கட்சிகள் கைவிட்டதுதான் காரணம் என்பதும் கூட முக்கியமான காரணத்தைக் காணத் தவறுவதாகும்.

இவற்றையெல்லாம் விட முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தமிழகத்தில் நிலவிய பார்ப்பன எதிர்ப்புணர்வை மங்கச் செய்வதற்கும், பகுத்தறிவு சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை ஒழிப்பதற்கும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் என்னென்ன செய்தார்கள் என்பதைத் தொகுத்தறிய வேண்டும். அந்தச் சிரமத்தை நமக்கு அவர்கள் கொடுக்கவில்லை. தாமே தொகுத்துக் கொடுத்துள்ளார்கள்.

**(தொடரும்)**

www.padippakam.com



## அயோத்தி சமரசம்:

# ஜெயேந்திரனின் கரசேவை

பாபர் மசூதி வளாகத்தில் நடந்து வரும் அகழ்வாராய்ச்சி, கிணறு தோண்ட பூதம் கிளம்பிய கதையாகி விட்டது. அவ்வகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், தூண்களும் அங்கு கோயில் இருந்ததற்கான ஆதாரமாக அமையவில்லை என இந்திய அகழ்வாராய்ச்சி நிறுவனமே ஒப்புக் கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. பா.ஜ.க.வும், ''அகழ்வாராய்ச்சியில் இதுவரை கிடைத்துள்ள பொருட்கள், கோவில் இருந்ததற்கான ஆதாரமாக அமைய வில்லை'' எனக் கூறியிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி ஆகியோர் மீது மையப் புலனாய்வுத் துறை இரண்டாவது குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. மேலும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப் பட்டுள்ள ராம் நாராயணன் தாஸ், வினோத் குமார், ராம் சந்திரா காத்ரி, அமர்நாத் கோயில், சந்தோஷ் துபே என்ற ஐந்து கரசேவகர்கள், ''அத்வானியும் ஜோஷியும் தங்களின் முதுகில் தட்டிக் கொடுத்து, மசூதியை இடித்துத் தள்ளுங்கள்; டிசம்பர் 6-க்குப் பிறகு மசூதி இருக்கக் கூடாது; நாங்கள் உங்களைக் கைவிட மாட்டோம்'' எனத் தங்களைத் தனியாகச் சந்தித்துக் கூறியதாக பேட்டியளித்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். இல் இருந்து விலகிச் சென்றுவிட்ட கரசேவகர்கள் இணைந்து உருவாக்கியிருக்கும் அகில பாரத அயோத்யா ராம் மந்திர் கரசேவகர்கள் சங்கமும், ''அத்வானியும், ஜோஷியும் பாபர் மசூதியை இடித்துத் தள்ளுமாறு தங்களைத் தூண்டிவிட்டதாக''க் கூறியிருக்கிறது.

இந்தக் கரசேவகர்கள் அனைவரும் கட்சி மாறியோ, இல்லை, பாபர் மசூதியை இடித்துத் தள்ளியதற்காக வருத்தப் பட்டோ அத்வானியையும், ஜோஷியையும் காட்டிக் கொடுக்கவில்லை. மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் சிறப்பு நீதிமன்றமும், மையப் புலனாய்வுத் துறையும் ஒரே மாதிரி நடத்த வேண்டும் என்பதற்காகதான், பதிமூன்று ஆண்டுகள் கழித்து இந்த உண்மையை ஒப்புக் கொண்டதாகக் கூறியிருக்கிறார்கள்.

தே.ஜ.கூ. அரசு, பாபரி மசூதி வளாகத்தை ஒட்டியுள்ள 67.703 ஏக்கர் நிலத்தை கடந்த ஆண்டு வி.இ.ப.விடம் ஒப்படைக்க முயன்ற பொழுது, உச்சநீதி மன்றம் தலையிட்டுத் தடை செய்தது. இத்தடையை நீக்கக் கோரி மைய அரசு தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்து விட்ட உச்சநீதி மன்றம், ''அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் நடந்துவரும் சிவில் வழக்கு முடியும் வரை, இந்த நிலத்தை யாருக்கும் கொடுக்கக் கூடாது'' என உத்தரவிட்டிருக்கிறது. மேலும், ''சர்ச்சைக்கு இடமில்லாத அந்த நிலப்பகுதியிலும் உண்மையான பூசையோ, அடையாள பூசையோ நடத்தக்கூடாது என கடந்த ஆண்டில் அளித்த தீர்ப்பு செல்லுபடியாகும்'' என்றும் தற்பொழுது அளித்துள்ள தீர்ப்பில் கூறியிருக்கிறது.

பாபர் மசூதி பிரச்சினையின் இன்றைய நிலைமை இதுதான். அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கவே பெரிய போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் - 'இந்துக்களும்' சரி, இப்பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள முசுலீம்களும் சரி, ராமர் கோயில் / பாபர் மசூதி பற்றியெல்லாம் பெரிதாக அக்கறை கொள்வது கிடையாது. இப்பிரச்சினையைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்ட, டிசம்பர் - 6 போலீசு கெடுபிடி வரவேண்டும்; இல்லையென்றால், ஆர்.எஸ்.எஸ். கும்பல் ராமர் கோயில் கட்டுவதை முன்வைத்து, செங்கல் பூசை, தூண் பூசை என ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நிலையை மீண்டும் உருவாக்கியிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். கடந்த ஒரு வருட காலமாகச் சீண்டுவாரின்றிக் கிடந்த ராமர் கோயில் பிரச்சினை, மீண்டும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக அடிபடத் தொடங்கியிருக்கிறது. ஒருபுறம், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு காஞ்சி சங்கராச்சாரியை முன்னிறுத்தி நடத்தத் துடிக்கும் தூது - சமரசப் பேச்சு வார்த்தை; இன்னொருபுறம் முசுலீம் மதத் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது என இந்து மத அமைப்புகளுக்குள்ளேயே நடக்கும் லாவணி கச்சேரி - இவற்றின் மூலம் ராமர் கோயில் பிரச்சினையை மீண்டும் ''ஜாக்கி'' போட்டு தூக்கி நிறுத்தியிருக்கிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

***

அத்வானியும் ஜோஷியும்தான் பாபர் மசூதியை இடிக்கச் சொல்லி எங்களைத் தூண்டிவிட்டனர்'' என வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருக்கும் கரசேவகர்கள்.



திரைப்படங்கள் வெற்றி பெற்றால் வெள்ளி விழா, பொன் விழா கொண்டாடுவது போல, காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதி, தான் பீடாதிபதி பதவிக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டதை ஊர் ஊராகப் போய்க் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார். அப்படி தில்லியில் நடந்த விழாவில் அவர், ''அயோத்தியில் ராமர் கோயில் கட்ட முசுலீம் மதத் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும், அந்த மதத் தலைவர்கள் பாபர் மசூதி இருந்த இடத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும்'' கூறினார்.

தில்லி இமாம் உள்ளிட்ட பல முசுலீம் மதத் தலைவர்களும், அமைப்புகளும், ''காஞ்சி சங்கராச்சாரி யாருடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார்?'' என்ற கேள்வியை எழுப்பினார்கள்; மேலும், ''பாபர் மசூதி இருந்த இடத்தை விட்டுக் கொடுக்க முசுலீம்கள் தயாராக இருப்பதாக சங்கராச்சாரியார் சொல்வது பொய்; நீதிமன்றத் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வோம் என்பதுதான் முசுலீம்களின் நிலைப்பாடு'' எனப் பதிலடி கொடுத்தார்கள்.

இந்த மறுப்புக்குப் பதில் சொல்லாமல் நழுவிவிட்ட சங்கராச்சாரி, பத்திரிகையாளர்களிடம் கூட, ''தன்னிடம் எந்தத் திட்டமும் இல்லை'' என்று தான் சொன்னார்.

பா.ஜ.க.வுக்கு நெருக்கமான பத்திரிகையாளர் ஒருவரும், மொராக்கோ நாட்டைச் சேர்ந்த முசுலீம் மதத் தலைவர் ஒருவரும் முசுலீம் தனிச் சட்ட வாரியப் பிரமுகர்களோடு பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், இதைக் கேள்விப்பட்ட சங்கராச்சாரி எரிச்சல் அடைந்ததாகவும், அவரைச் சமாதானப்படுத்தான் மைய அமைச்சர்கள் ஜார்ஜ் பெர்னாண்டசும், ஜஸ்வந்த் சிங்கும் காஞ்சிக்குத் தரகர்களாக வந்ததாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

தன்னைத் தவிர வேறு யாரும் சமரச முயற்சியில் இறங்கி, குறுக்கு சால் ஓட்டக்கூடாது என்ற உறுதிமொழியை மைய அமைச்சர்களிடம் வாங்கிக் கொண்ட பிறகுதான் 'சுவாமிகள்' சமாதானமடைந்தாராம். அதே சமயம் மைய அமைச்சர்கள் இருவரும், சுவாமிகளைத் தரிசிக்கதான் வந்ததாகவும், காஞ்சி மடம் நடத்தும் பல்கலைக்கழகத்தின் கட்டிடத்தைத் திறக்கதான் வந்ததாகவும் கூறி, ஊரை ஏய்த்து வருகிறார்கள்.

சங்கராச்சாரிக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கும் இடையே நடந்த இந்த இரகசியப் பேச்சுவார்த்தையின் இடையே, ''ஒரு சமரசத் திட்டமொன்றை முசுலீம் தனிச் சட்ட வாரியத்திற்கு அனுப்பி வைத்திருப்பதாக'' சங்கராச்சாரி தெரிவித்தார். ''இத்திட்டம் பற்றி ஜூலை 6-இல் கூடும் செயற்குழுவில்தான் முடிவெடுக்கப்படும்'' என அவ்வாரியத்தின் தலைவர் ராபே ஹாஸ்னே நாட்வி கூறியிருக்கிறார்.



காஞ்சி சங்கராச்சாரியோடு சமரசத் திட்டம் பற்றி ரகசியப் பேச்சு வார்த்தை நடத்தப் பறந்து வந்த ஜார்ஜ் பெர்னாண்டசு மற்றும் ஜஸ்வந்த் சிங்.

***

''அரசாங்கம் நியமிக்கும் கமிட்டியின் மூலம் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவது; 10 கி.மீ. தள்ளி மசூதியைக் கட்டுவது; இப்பிரச்சினை தொடர்பான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறுவது; காசி, மதுரா பிரச்சினைகளை, இந்து அமைப்புகள் கைவிடுவது; இந்திய அகழ்வாராய்ச்சி மையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 100 மசூதிகளில், முசுலீம்கள் தொழுகை நடத்த அனுமதிப்பது'' - இவைதான் காஞ்சி சங்கராச்சாரி அனுப்பி வைத்துள்ள திட்டத்தின் சாரம் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜெயேந்திரர் 'சமரச' முயற்சியில் ஈடுபட்டபொழுது, ''சர்ச்சை இல்லாத நிலப்பகுதியில் (67.703 ஏக்கர் நிலப்பரப்பில்) கோவில் கட்ட அனுமதிப்பது; சர்ச்சைக்குரிய பகுதி (பாபர் மசூதி இருந்த இடம்) பற்றி நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு, அதன்படி மசூதி இருந்த இடத்தை நீதிமன்றம் சொல்லுபவர்களிடம் ஒப்படைப்பது'' என்ற நயவஞ்சகமான திட்டத்தை முன் வைத்தார். இப்பொழுதோ மிகவும் வெளிப்படையாக, ''நீதிமன்றத் தீர்ப்பு வரும் முன்பே, பாபர் மசூதி வளாகத்தைக் கோவில் கட்ட முசுலீம்கள் தந்துவிட வேண்டும்'' என்கிறார். பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமர் கோயிலைக் கட்டுவது என்பது சமரசத் திட்டம் அல்ல; இது ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டம். பீதியில் தள்ளப்பட்டுள்ள முசுலீம் மக்களின் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தச் சதித் திட்டத்தை, சமரசத் திட்டம் என்ற போர்வையில், சங்கராச்சாரி - வாஜ்பாயி கூட்டணி நிறைவேற்றி விடத் துடிக்கிறது.

இது ஒருபுறமிருக்க, 'இந்துக்களின்' ஏகப் பிரதிநிதியைப் போலக் காட்டிக் கொண்டு, காஞ்சி சங்கராச்சாரி முன் வைத்துள்ள 'சமரச'த் திட்டத்தை, மற்ற சங்கராச்சாரிகள் ஒரு பொருட்டாக மதிக்கவுமில்லை; அங்கீகரிக்கவுமில்லை. காஞ்சி சங்கர மடத்தின் அடிவருடியான பார்ப்பன துக்ளக் 'சோ' கூட, ''இந்து மதத்தில் கணிசமான அளவில் பின்பற்றுவோரைக் கொண்ட மடங்கள் பல உண்டு; அவற்றில் காஞ்சி மடம் ஒன்று. அந்த மடாதிபதி சொல்லும் தீர்வை, மற்ற இந்து


படிப்பகம்

அமைப்புகள் எல்லாம் ஏற்குமா?'' எனச் சந்தேகத்தை எழுப்புகிறார்.

காஞ்சி சங்கராச்சாரியோடு ஒட்டிக் கொண்டு திரியும் ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப., கூட காசி - மதுரா பிரச்சினைகளை கைவிடுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன. அதேசமயம், இந்து மதவெறி அமைப்புகள் காசி, மதுரா பிரச்சினையை விட்டுக் கொடுப்பதாக இன்று ஒத்துக் கொண்டால் கூட, நாளை மீண்டும் இந்தப் பிரச்சினையை எழுப்ப மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. பாபர் மசூதியை இடிக்க மாட்டோம் என உச்சநீதி மன்றத்திற்கு வாக்குறுதி கொடுத்த கையோடு, அதை இடித்துத் தள்ளியவர்கள் தாம் ஆர்.எஸ்.எஸ். காலிகள். அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ, அதற்கு எதிராகச் செயல்படுவதுதான் இந்துமதவெறி பாசிஸ்டுகளின் பாரம்பரியம்.

பாபர் மசூதியை இடிக்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்த, அதை இடித்துத் தள்ளிய வி.இ.ப.வைப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள அனுமதிக்கும் வாஜ்பாயி - சங்கராச்சாரி கூட்டணி, பாபர் மசூதியைக் காக்கப் போராடிய அகில இந்திய பாபரி மசூதி செயல் கமிட்டியைக் கண்டு கொள்ளவேயில்லை. இந்த அமைப்பு, ''அயோத்தி பிரச்சினையில் விட்டுக் கொடுப்பதற்கு இடமே இல்லை'' எனக் கூறி வருவதால், இவ்வமைப்பைத் திட்டமிட்டே புறக்கணிக்கிறார்கள். முசுலீம் மதத் தலைவர்களிடையே / அமைப்புகளிடையே கருங்காலிகளைத் தேடிப் பிடித்தோ / உருவாக்கியோ, அவர்கள் மூலம் இச் 'சமரச'த் திட்டத்தை நிறைவேற்றி விட்டு, பெயரைத் தட்டிக் கொண்டு போகத் திட்டம் போடுகிறது, வாஜ்பாயி - சங்கராச்சாரி கூட்டணி.



அயோத்தியில் ராமர் கோயில் கட்ட, பூசை நடத்தும் வி.இ.ப. தலைவர் அசோக் சிங்கால்: பூசை பலிக்குமா?

★★★

ஒரே நாளில் பாபரி மசூதியை இடித்து விட்டு, அங்கு (சட்ட விரோத) தற்காலிக ராமர் கோயிலைக் கட்டியதைப் போல, ஆர்.எஸ்.எஸ். கும்பலால் நிரந்தர ராமர் கோயிலைக் கட்டிவிட முடியாது. அதற்குச் சட்ட பூர்வ அங்கீகாரம் / பாதுகாப்புகள் தேவை. சட்டப்படி பார்த்தால், நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் பாபர் மசூதி பிரச்சினை தொடர்பான வழக்குகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்.க்குச் சாதகமாக இல்லை. ஆர்.எஸ்.எஸ். கோருகிறபடி, ராமர் கோவிலைக் கட்டுவதற்கு வசதியாக மைய அரசு சட்டம் போட வேண்டும் என்றால், அதற்கு நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.விற்குத் தனிப் பெரும்பான்மை தேவை.

இது ஒருபுறமிருக்க, இந்த ஆண்டு இறுதியில் வட இந்தியாவில் நான்கு மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்களும், அதன்பின்னர் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களும் நடைபெற உள்ளன. பா.ஜ.க. இந்தத் தேர்தல்களில் இந்துக்களின் ஓட்டுக்களைப் பொறுக்க வேண்டும் என்றால் கூட, தனது சாதனையாக எதையாவது சொல்லியாக வேண்டும்.

மத்தியப் பிரதேசத்தில் ''போஜ்சாலா'' பிரச்சினையைக் கிளப்பி, இந்துமதவெறியைத் தூண்டி விட்டு, ஓட்டுக்களை அறுவடை செய்ய பா.ஜ.க. முயற்சி செய்தது. ஆனால், அப்பிரச்சினையை பா.ஜ.க.வுக்கு எதிராகவே காங்கிரசு திருப்பியது. மேலும், பசுவதைத் தடுப்புச் சட்டம், பசு பாதுகாப்பு போன்ற இந்துத்துவா திட்டங்களை நடைமுறைப்படுத்தி, பா.ஜ.க.வின் விரலைக் கொண்டே, அதன் கண்ணைக் குத்தி வருகிறது, காங்கிரசு.

இராசஸ்தானிலோ மேல்சாதியைச் சேர்ந்த இந்துக்களுக்கு இட ஒதுக்கீட்டை அறிவித்ததன் மூலம், காங்கிரசு கட்சி, பா.ஜ.க.வுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டது. இந்நிலையில் பா.ஜ.க. எதைப் பேசி ஓட்டுப் பொறுக்க முடியும்? மைய அரசின் தனியார்மயச் சாதனைகளைப் பற்றிப் பேசினால், மக்களிடமிருந்து செருப்புதான் பறந்து வரும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான், அயோத்தி பிரச்சினையில் சமரச பேச்சு வார்த்தை நாடகத்தை மீண்டும் துவங்கியிருக்கிறது, ஆர்.எஸ்.எஸ்.

இந்தச் 'சமரச' - பேச்சு வார்த்தை ஓர் அடி முன்னால் நகர்ந்தால் கூட, பா.ஜ.க., அதையே தனது சாதனையாகக் கூறிக் கொள்ளும்; இதற்கு மாறாக, கடந்த முறை போல, இந்தச் 'சமரச'த் திட்டம் முளையிலேயே கருகிப் போனால், அதற்கு முசுலீம்களின் தலையைப் போட்டு உருட்டி இந்து மதவெறியைக் கக்கும்.

அதேசமயம், அயோத்தி பிரச்சினை என்பது, இந்துக்களின் ஓட்டுக்களைக் கவர, பா.ஜ.க. பயன்படுத்தும் வெறும் கவர்ச்சித் திட்டம் அல்ல. பாபர் மசூதியை தேசிய அவமானச் சின்னமாகவும், அம்மசூதியை இடித்ததையும், அங்கே ராமர் கோயில் கட்டுவதையும் இந்து தேசிய எழுச்சியாகவும் பா.ஜ.க. கருதுகிறது. அவர்கள் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கவும் அயோத்தி பிரச்சினையைப் பயன்படுத்துவார்கள்; இந்து ராஷ்டிரத்தை அமைக்கும் நோக்கத்தோடு, அயோத்தி - காசி - மதுரா பிரச்சினைகளை அரசியல் திட்டமாகவும் பயன்படுத்துவார்கள்.

பிரதமர் வாஜபாயி, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, அயோத்தியில் ராமன் கோயில் கட்டுவது என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டத்தை, இச்சமரசப் பேச்சு வார்த்தையின் மூலம் நடைமுறைப்படுத்த முனைகிறார். ஆனால், இக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் திராவிடக் கட்சிகளோ இதற்கு எதிராக முணுமுணுக்கக் கூட இல்லை. பதவி சுகமும், ஜெயா பற்றிய பயமும் அவர்களின் வாயைக் கட்டிப் போட்டுவிட்டது போலும். இக்கூட்டணிக்கு வெளியில் இருக்கும் மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளோ, நீதிமன்றம்தான் இப்பிரச்சினையில் தீர்ப்பு சொல்ல வேண்டும் எனக் கூறி, ஒதுங்கிக் கொண்டு விட்டன. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் பலமே, இந்த 'மதச்சார்பற்ற' ஓட்டுக்கட்சிகளின் பலவீனத்தில்தான் உள்ளது.

❑ அழகு

# தருமபுரியில் காலரா சாவுகள்:
# அரசின் கொலை!

கடந்த ஜூன் மாதம் மத்தியில் தருமபுரி மற்றும் மொரப்பூர் ஒன்றியங்களைச் சார்ந்த 60-க்கும் மேற்பட்ட கிராமங்களில் காலரா நோயால் 2000-க்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். இதில் 20-க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். கொள்ளை நோய் திடீரென தாக்கி மக்களைப் பலி கொண்டு விட்டதாக அரசும் பத்திரிக்கைகளும் செய்தி வெளியிட்டு உண்மையைத் திட்டமிட்டு மறைத்தன.



தருமபுரி அருகேயுள்ள இருமத்தூரில் தென்பெண்ணை ஆற்றில் கிணறு மூலம் நடுப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், டி.துறிஞ்சிப்பட்டி, கம்பை நல்லூர், சோலைக் கொட்டாய், நடுப்பட்டி உட்பட 60-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது காலரா வந்த பகுதியும் இதுதான். தென்பெண்ணை ஆற்றில் பெங்களூரிலிருந்து வரும் கழிவு நீரும், பல இடங்களில் மாம்பழச்சாறு ஆலைகளின் கழிவுகளும் கலக்கப்படுகின்றன. மேலும் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் அருகில் ஆடு, மாடு, கோழி, மீன் ஆகியவற்றின் மாமிசக் கழிவும் கலக்கப்படுகின்றன. இதனுடன் மணல் திருட்டும் சேர்ந்ததால், கழிவுநீர் நீண்டநாள் தேங்கி குடிநீர் கிணறுகளில் கலந்துவிட்டது.

மணல் திருட்டு மற்றும் கழிவு நீரின் அபாயத்தைப் பற்றி பல சமூக நல அமைப்புகள் எச்சரித்த பிறகும் அதிகார வர்க்கமும் அரசியல்வாதிகளும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. போதாக்குறைக்கு, மருந்துகளே இல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையங்களும், மருத்துவர்களே இல்லாமல் மருத்துவமனைகளும் எமன்களாக மாறி உழைக்கும் மக்களின் உயிர்களை குடித்துவிட்டன.

இனி காசு உள்ளவர்கள்தான் சுத்தமான குடிநீரையும் உயிர் காக்கும் மருந்துகளையும் பெற முடியும் என்பது இதன் மூலம் நிரூபணமாகிவிட்டது. காசு இல்லாதவர்கள் பிழைப்பதற்கு மட்டுமல்ல, உயிர் வாழ்வதற்கும் உரிமையில்லை என்று பார்ப்பன ஜெயா அரசு இதன் மூலம் பட்டவர்த்தனமாகச் சொல்கிறது.

காலரா நோயில் மாண்ட விவசாயக் குடும்பங்களுக்கு நட்ட ஈடு - நிவாரணம் தரக்கோரியும், நோய் பரவியுள்ள பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீரும் மருத்துவ உதவியும் வழங்கக் கோரியும், உலக வங்கியின் உத்திரவுக்கு இணங்கி உழைக்கும் மக்களின் உயிராதாரமான பிரச்சினைகளை அலட்சியம் செய்யும் கொலைகார ஜெயா அரசுக்கு எதிராக வும் தருமபுரி வி.வி.மு. சார்பில் விரிவான பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

**தகவல்: வி.வி.மு., தருமபுரி.**


## டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கர்
### – கணினிக் குறுந்தகடு –



* அம்பேத்கரின் முக்கியமான வாழ்க்கை நிகழ்ச்சிகள்
* ஆங்கிலத்தில் அம்பேத்கர் எழுதிய அனைத்தையும் உள்ளிட்டு - அவரது படைப்புக்கள்
* அம்பேத்கரின் நேர்காணல்கள்மற்றும் விவாதங்கள் இதில் சட்டசபை, பாராளுமன்றம், அரசியல் நிர்ணய சபை ஆகியவற்றில் அவர் நடத்திய அனைத்து விவாதங்களும் இடம் பெற்றிருக்கிறது.
* அம்பேத்கரின் கையெழுத்துப் பிரதிகள்.
* பல்வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட அம்பேத்கரின் புகைப்படங்கள், குடும்பத்தினருடன் அவர் இருக்கும் புகைப்படங்கள் மற்றும் அவர் நடத்திய போராட்டக் களங்கள், இயக்கத் தோழர்கள், தொண்டர்கள், மற்ற மக்களுடன் அம்பேத்கர் இருக்கும் 400 அரிய புகைப்படங்கள்.
* அரசியல் நிர்ணய சபையில் அவர் ஆற்றிய உரை - ஒலி வடிவத்தில்...
* வீடியோவில் அவரது முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுருக்கமாக...
* அம்பேத்கர் எழுதிய படைப்புக்களை கண்டுபிடிக்கும் வகையில் பொதுவான குறிப்பான தலைப்புக்களை வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் பொருளடக்கம்...

- இக்குறுந்தகட்டை கணினியில்தான் பயன்படுத்த முடியும் என்றாலும், கணினி இல்லாதவர்கள், இணையத்தள மையங்கள் சென்று பயன்படுத்தலாம். மேலும் அம்பேத்கரின் படைப்புக்களில் இருந்து தேவைப்படும் தலைப்பு, விவரங்களை நிமிடத்தில் தேடி எடுக்கலாம். 600-க்கும் மேற்பட்ட புகைப்படங்களிலிருந்து தேவையானதை எடுத்துப் பயன்படுத்தலாம்.

- இவ்வரிய குறுந்தகட்டை தொகுத்து உருவாக்கியவர் முனைவர். ஆனந்த் தெல் தும்ப்டே அவர்கள், மும்பை.

- விலை ரூ. 400/- தபால் செலவு ரூ.20/-

கிடைக்குமிடம்:

**புதிய கலாச்சாரம் அலுவலகம் மற்றும்**
**கீழைக்காற்று வெளியீட்டகம்**
**10, ஔலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை, சென்னை - 600 002.**
**தொ.பே.எண்: 28412367**

www.padippakam.com



## ஜெயா ஆட்சி

# உல்லாசம்-ஊதாரித்தனம்-ஊழல்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜெயா முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்தவுடனேயே, அவர் வாயில் இருந்து வந்து விழுந்த வார்த்தை - ''கஜானா காலி''. ஜெயா ஆட்சியின் மணிமொழியாகத் திகழும் இந்த இரண்டு வார்த்தைகளும், கொள்ளைக் கூட்டக் கும்பலின் சங்கேத மொழியைப் போன்றவை. அவரது அகராதியில், ''கஜானா காலி'' என்றால் மக்களைக் கொள்ளையடி என்று பொருள். இதை, இன்று ஆரம்பப் பள்ளி மாணவர்கள் கூடப் புரிந்து கொண்டு விட்டனர்.

''கஜானா காலி'' என்ற பல்லவியைப் பாடியே, பள்ளி மாணவர்களுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்களின் விலையைக் கிடுகிடுவென உயர்த்தி விட்டார், ஜெயா. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும்தான் இனி இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என அறிவித்து, அந்தச் சலுகையை அடியோடு குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியிலும் இறங்கிவிட்டார், அவர்.

ரேசன் மானியத்தை வெட்ட, வறுமைக் கோட்டுக்குக் கீழே, மேலே (மஞ்சள் அட்டை, ஊதா அட்டை) என நயவஞ்சமாகப் பிரித்ததைப் போல, பஸ் பாஸ் சலுகையை வெட்ட மாணவர்களை இரண்டு கூறாகப் பிரித்துப் போட்டிருக்கிறார், ஜெயா. இதனால், தனியார் பள்ளி மாணவர்களின் கழுத்தில் இறங்கிய கத்தி, எப்போது வேண்டுமானாலும் அரசு பள்ளி மாணவர்களின் கழுத்திலும் இறங்கலாம் என்ற அபாயம் வந்துவிட்டது.

பல இலட்சக்கணக்கான மாணவர்களுக்குப் பயனளித்த இலவச பஸ் பாஸ் சலுகையை வழக்குவதற்கு, அரசுக்கு ஓர் ஆண்டுக்கு 160 கோடி ரூபாய் வரை செலவாகும் எனக் கூறப்படுகிறது. நட்டக் கணக்குக் காட்டி அந்தச் சலுகையைப் பாதியாக வெட்டி விட்ட தமிழக அரசு, ஜெயா, சசிகலா என்ற இரண்டு பேர் ஹெலிகாப்டரில் உல்லாசமாகப் பறந்து ஊர்சுற்றி வருவதற்கு 40 கோடி ரூபாயைத் தண்டமாகச் செலவு செய்துள்ளது.

தமிழக அரசின் செலவைக் குறைப்பது என்ற பெயரில், ஏழைப் பெண்களுக்கு வழங்கி வந்த திருமண உதவித் திட்டத்தை கடந்த ஆண்டு பட்ஜெட்டில் கைகழுவினார் ஜெயா. அதேசமயம், பாலக்காடு ஜோசியன் சொன்ன பரிகாரத்துக்காக, ஒவ்வொரு ஆண்டும் இலவசத் திருமணங்களை அரசு செலவில் நடத்தி வைக்கிறார். தனது சுயநலனுக்காக, அரசு கஜானாவில் இருந்து 60-70 இலட்ச ரூபாயை எடுத்து திருமணச் செலவிற்காக அள்ளி விடுகிறார்.

ஒருபுறம் ரேசன் அரிசியின் விலையை உயர்த்திய ஜெயா, இன்னொருபுறம், ஆலய அன்னதானத் திட்டத்திற்கு கஜானாவைத் திறந்து வைக்கிறார். தமிழக மக்கள் சட்டப்படி பெற்றுவந்த சலுகைகளை, தான் பார்த்துப் போடும் பிச்சையாக மாற்றுகிறார், அவர். ஜெயா மட்டுமல்ல, அவரது ஆட்சியே ஊழல் - ஊதாரித்தனத்தில் மூழ்கிப் போய், தமிழக கஜானாவை மொட்டையடித்துக் கொண்டிருக்கிறது.

2001-ஆம் ஆண்டில் ஜெயா பதவியேற்றவுடன், ''கருணாநிதி கஜானாவைச் சுத்தமாகத் துடைத்து வைத்து விட்டுப் போய்விட்டார்'' என்று கூறித்தான், 3,500 கோடி ரூபாய்க்கு வரிகளையும், கட்டணங்களையும் உயர்த்தினார். 2001-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு - செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்த அதிகாரிகள், கஜானா காலியாகக் கிடப்பதாகக் கூறப்பட்ட அந்த ஆண்டில் நடந்துள்ள முறைகேடுகளைப் பட்டியல் போட்டு, அறிக்கையாகத் தொகுத்து தற்பொழுது வெளியிட்டுள்ளனர். ''கடைஞ்ச மோரில் வெணணெய் எடுக்கிறவன் அவன்'' என்று கூறுவார்களே, அது போல, 'காலியாகி'க் கிடந்த கஜானாவில் கூடப் புகுந்து விளையாடி இருக்கிறது, புரட்சித் தலைவியின் ஆட்சி.

✱ சென்னை - மாமல்லபுரம் சாலை, மர்மலாங் பாலம் - இரும்புலியூர் சாலை போன்ற சில சாலைகள் தேவையின்றி அகலப்படுத்தப்பட்டதால், பொதுப்பணித் துறையில் 17.46 கோடி ரூபாய் வீண் செலவு செய்யப்பட்டுள்ளது.

✱ தூர்வாரும் பணிகளுக்கு துறையின் இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற அரசு ஆணையைப் புறக்கணித்து, ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்ததால், பொதுப் பணித்துறையில் அரசுக்கு 1.51 கோடி ரூபாய் கையில் இருந்து வெளியேறியது.

✱ சென்னை நகரில் கேபிள் தொலைக்காட்சி இணைப்புகளின் எண்ணிக்கையை, சென்னை மாநகராட்சி கண்டறியாததால், ரூ. 51.84 கோடி அளவிற்கு கேளிக்கை வரி வசூலிக்க முடியவில்லை.

✱ போக்குவரத்துத் துறையில், பேருந்துகளுக்குத் தேவைப்படும் டயர் ரப்பர் பொருட்களை, சந்தை விலைக்குக் கூடுதலாகக் கொடுத்து வாங்கியதில் 89 இலட்ச ரூபாய் அளவிற்கு நட்டமேற்பட்டுள்ளது.

✱ ஊரகச் சாலைகள் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் அதைப் பயன்படுத்தாமல், வெளிச்சந்தையில் சுமார் 133 கோடி ரூபாய் பெற்று, அதற்குத் தேவையில்லாமல் 14.37 கோடி ரூபாய் வட்டி கட்டப்பட்டுள்ளது.

✱ பொதுப்பணித்துறை, ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் கோராமலேயே, வெளிச் சந்தையில் 34,179 டன்


படிப்பகம்

www.padippakam.com


சிமெண்ட் வாங்கியதில் மட்டும் 1.26 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

✱ ஏற்கனவே முடிவடைந்துவிட்ட, ஆனால் தகுதியில்லாத பணிகளுக்காகப் பொதுப்பணித்துறை முன்னதாகவே வட்டிக்குக் கடன் வாங்கி, ரூ.5.36 கோடி ரூபாய் அளவிற்கு தவிர்த்திருக்கக் கூடிய செலவைச் செய்தது.

✱ சென்னை - சூளைமேட்டில் கூவம் நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதிலும்; சைதாப்பேட்டையில் சுரங்கப்பாலம் அமைப்பதிலும்; மகாகவி பாரதியார் நகர், நடுவங்கரை ஆகிய இடங்களில் பாலங்கள் அமைத்ததிலும் தேவையின்றிக் கூடுதலாக 1.64 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது.

✱ வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அரசு நிதி 1.12 கோடி ரூபாய் மூன்று வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், ரூ. 51.74 இலட்சம் வட்டி வீணாகக் கொடுக்கப்பட்டது.

- இப்படி நீண்டு கொண்டே போகும் இந்தப் பட்டியலில் ஊழல் பாதி, ஊதாரித்தனம் பாதி கலந்திருப்பதைக் கண்டுபிடிக்க பூதக்கண்ணாடி எதுவும் தேவையில்லை. தணிக்கைத்துறை அதிகாரிகளும் மறைக்க முடியாது என்ற நிலையில், சுண்டெலிகளைத் தான் அம்பலப்படுத்தியிருக்கிறார்களே தவிர, பெருச்சாளிகளைக் கண்டு கொள்ளவில்லை.





**இலவசத் திருமணத்திற்காக அமைக்கப்பட்ட ஆடம்பர முகப்பு (மேலே); (கீழே) ஆபாசக் கூத்து; ஊதாரித்தனத்தால் காலியாகிறது கஜானா.**

உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னால் பத்திரப் பதிவின் மூலம் கடந்த ஆண்டு தமிழக அரசுக்கு வந்திருக்க வேண்டிய வருமானம் 1,700 கோடி ரூபாய்; ஆனால், வந்த வருமானமோ 1200 கோடி ரூபாய்தான். மீதமுள்ள 500 கோடி ரூபாயைப் பல்வேறு மோசடிகளின் மூலம் அதிகார வர்க்கமும், பணக்காரக் கும்பலும் பங்கு போட்டுக் கொண்டுள்ளன. ஜெயாவின் ஆன்மீகக் குரு காஞ்சி மடச் சங்கராச்சாரி, பத்திரத் துறைக்குப் போட்ட நாமம் 9 இலட்ச ரூபாய் என்று கூறப்படுகிறது.

ஜெயாவின் தலைமையில் தமிழக கஜானாவை மொட்டையடித்து வரும் கும்பல், கஜானா காலியானதற்குப் பொது மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும், மானியங்களும்தான் காரணம் என வீண் பழி சுமத்துகிறது. ''காலியாகக்'' கிடந்த கஜானாவை நிரப்ப, ஜெயா நெல் கொள்முதலை நிறுத்தினார்; இலவச வேட்டி - சேலைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களைக் குழி தோண்டிப் புதைத்தார்; ரேசன் அரிசிக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை வெட்டி, அரிசியின் விலையை இரண்டு மடங்காக உயர்த்தினார். இலவச மின்சாரத்தை ரத்து செய்தார். அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்து, கல்வியை வியாபாரமாக்கினார்.

ஓட்டு போட்ட மக்களுக்கு, ஒரு குடம் குடிதண்ணீர் கூட வழங்க வக்கற்ற ஜெயாவின் ஆட்சி, கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டதட்ட 10,000 ஆயிரம் கோடி ரூபாயை, பொது மக்களிடமிருந்து வரியாகவும், கட்டண உயர்வாகவும் பகற்கொள்ளை அடித்திருக்கிறது. இந்தப் பணத்தின் பெரும்பகுதி ஆளும் கும்பலின் ஊழலுக்கும், உல்லாசத்திற்கும், ஊதாரித்தனத்திற்கும்தான் பயன்படுகிறது எனும் பொழுது, நாம் ஏன் வரி கட்ட வேண்டும்? நமது சலுகைகளை ஏன் இழக்க வேண்டும்? வெள்ளைக்காரனுக்கு எதிராக வரி கொடா இயக்கம் நடந்ததைப் போல, இந்தக் கொள்ளைக் கூட்டத்திற்கும் எதிராகவும் வரி கொடா இயக்கத்தைக் கட்டியமைப்பதுதான் இன்றைய தேவை!

❑ செல்வம்


படிப்பகம்

# கோகோ – கோலாவின் தண்ணீர்க் கொள்ளை

''நதிகளை இணைக்க வேண்டும்'', ''நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும்'' என்ற ஓட்டுக் கட்சிகளின் வெற்றுக் கூச்சல் காது கிழிபடும் அளவு கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில், நாட்டு நடப்போ, இந்த வெற்றுக் கூச்சலுக்கு நேரெதிராக இருக்கிறது. நதிகள் மட்டுமல்ல, நிலத்தடி நீர்வள ஆதாரங்கள் கூட தனியார்மயமாக்கப்படுகிறது.

இத்தனியார்மயத்தை எதிர்த்த போராட்டங்கள் நாட்டின் பல பகுதிகளில் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. அதிலொன்றுதான் தமிழகத்திலுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கிராம மக்கள் கோகோ - கோலாவை எதிர்த்து நடத்தி வரும் போராட்டம்.

சிவகங்கை மாவட்டம் படமாத்தூரில் அமெரிக்க குளிர்பான நிறுவனமான கோகோ - கோலா தன் உற்பத்தி ஆலையை நிறுவியிருக்கிறது. ஒரு நிமிடத்திற்கு 600 பாட்டில்கள் நிரப்பும் திறன் கொண்ட உற்பத்தி பிரிவு முதற்கட்டமாக செயல்படத் தொடங்கியுள்ளது. இதற்காக இராட்சத போர்வெல் இயந்திரங்களைப் பயன்படுத்தி பூமிக்கடியில் 3000 அடி ஆழத்திற்கு துளையிட்டு நாளொன்றுக்கு ஒன்பது லட்சம் லிட்டர் தண்ணீரை உறிஞ்சத் தொடங்கியுள்ளது.

சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களின் குடிநீர் தேவையை ஓரளவிற்கு நிவர்த்தி செய்து வருவது வைகை நதிநீர் கூட்டுக் குடிநீர் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரே கோடை காலங்களில் பற்றாக் குறையாகி மக்கள் அவதியுறும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், வைகை நதியின் நிலத்தடி நீரைக் கொள்ளையிடும் கோகோ கோலாவின் திட்டம் முற்றாக அம்மக்களின் குடிநீரைக் கபளீகரம் செய்து அடிமடியை அறுப்பதற்கு ஒப்பாகும்.

கோகோ கோலா நிறுவனம் இப்படி நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கு சட்டரீதியான அனுமதியைப் பெற்றுள்ளதா என்றால், அதுதானில்லை.

படமாத்தூரில் உள்ள சக்தி சர்க்கரை ஆலை தன் உற்பத்தி தேவைக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றுள்ளது. இது குளிர்பானம் தயாரிப்பதற்கோ, குடிநீர் விற்பனை செய்வதற்கான அனுமதியோ அல்ல. இந்த அனுமதியை முறைகேடாக பயன்படுத்திக் கொண்டுதான் கோகோ கோலா தன் குளிர்பான தயாரிப்பைத் தொடங்கியுள்ளது. இது அப்பட்டமான பகற் கொள்ளை; சட்டவிரோத நடவடிக்கை.

பெப்சி, கோக் நிறுவனங்களின் கோவை - ஈரோடு மாவட்ட 'ஏஜெண்ட்,' 'தேசபக்த திலகம்' அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கத்துக்குச் சொந்தமானதுதான், இந்த சக்தி சர்க்கரை ஆலை. சென்ற மாதம் சிவகங்கையில் இந்த ஆலைக்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதோடு கோகோ - கோலாவைத் தமிழ்நாட்டை விட்டே விரட்டியடிப்போம் என்றும் சூளுரைத்திருக்கிறது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள 'உறவை' புரிந்து கொண்டவர்கள் மேற்கண்ட அறிவிப்பைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்கலாம்.

இ.க.க.யின் கலை இலக்கிய அமைப்பான தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தரகு முதலாளியான மகாலிங்கத்துக்குத் 'தமிழ்ச் செம்மல்' பட்டம் கொடுத்து கௌரவித்தது ஒருபுறமிருக்கட்டும். ''வைகை நீர் கொள்ளை'' என்ற பெயரில் இ.க.க.யின் மாநிலத் துணை செயலர் சி. மகேந்திரன் எழுதிய துண்டு பிரசுரமொன்று சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சக்தி சர்க்கரை ஆலைக்கு எதிராகப் போராட மக்களை அணிதிரட்டும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டிருக்கும் இப்பிரசுரத்தின் கடைசி பக்கத்தில், ''நிலத்தடி நீர் குறைந்தால் தமிழகம் பாலைவனமாகிவிடும்'' என்ற பொள்ளாச்சி மகாலிங்கத்தின் ''சிந்தனை சித்திரத்தை''க் கட்டம்கட்டி வெளியிட்டுள்ளார்கள். ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்! ஓநாய் அழுவதைப் பார்த்து தானும் அழும் இந்திய கம்யூனிஸ்டு கட்சிதான் கோகோ - கோலா நிறுவனத்தை விரட்டியடிக்கப் போகிறதாம்.

இன்று வைகை நதியின் நிலத்தடி நீரைச் சூறையாடும் கோகோ - கோலா ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளிலும் தன் சூறையாடலை அத்துமீறி நடத்தியுள்ளது. கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் சிற்றூர் வட்டத்திலுள்ள பிளாச்சிமடாவில் சென்ற ஆண்டு கோக் நிறுவனம் உற்பத்தி ஆலையைத் தொடங்கியது. நாளொன்றுக்கு 15 லட்சம் லிட்டர் தண்ணீரை சிற்றூர் புழா ஆற்றின் நிலத்தடி நீரிலிருந்து கபளீகரம் செய்து வந்தது. இதனாலும் ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகளாலும் அப்பகுதிகளில் கிணற்று

சிவகங்கையில் கோகோ - கோலா குளிர்பான நிறுவனத்துக்கு எதிராக போராடும் மக்கள்.



www.padippakam.com



# தண்ணீர் கேட்டால் தடியடி!

நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊர், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிப்பாளையம். அந்நியத் துணி இறக்குமதி, பஞ்சு ஏற்றுமதி மற்றும் கலால் வரி விதிப்பை எதிர்த்து அப்பகுதியில் வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதால் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக தறிப் பட்டறைகள் பெரும்பாலானவை மூடப்பட்டு வேலையில்லாமல் தொழிலாளர்கள் அரைப் பட்டினி கிடந்து வருகின்றனர். பள்ளிப்பாளையத்தை ஒட்டிய ஒரு சில கிராமங்களில் கஞ்சித் தொட்டியும் திறக்கப் பட்டிருக்கிறது.

ஏற்கெனவே காவிரியும் வறண்டு குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லா மல், ஆண்களும் பெண்களுமாக குடும்பத்துடன் அனைவரும் குடங்களைத் தூக்கிக் கொண்டு தண்ணீரைத் தேடி இரவுபகலாக அலைந்தாலும் தண்ணீர் கிடைத்தபாடில்லை. ஆழ் குழாய் கிணறு மோட்டார் வசதி உள்ளவர்கள் ஒரு ரூபாய்க்கு மூன்று குடமென்று தண்ணீரை விற்று வருகின்றனர். இங்கும் தண்ணீர் பிடிக்கும் ஒவ்வொரு இடத்திலும் 500 பேருக்குக் குறையாமல் கூட்டம் சேர்வதால், காலையில் சென்றவர்கள் மாலையில்தான் தண்ணீர் பிடித்து வர முடியும் என்பதுதான் நிலைமை! தண்ணீர் பிடிக்கப் போனால் வேலைக்குப் போக முடியாது; வேலைக்குப் போனால் தண்ணீர் கிடைக்காது என்ற நிலையில் நீருமின்றி வருமானமுமின்றி இருதலைக் கொள்ளி எறும்பாக மக்கள் திணறுகின்றனர்.

பொறுமை இழந்த சிலர் மே மாதம் 27-ம் தேதி காலை 7.00 மணியளவில் பிரதான சாலையில் குடங்களை வைத்துச் சாலை மறியல் செய்தனர். இச்செய்தி ஊருக்குள் பரவி அடுத்த ஒரு மணிநேரத்தில் நகரமே திரண்டு 10,000-க்கும் மேற்பட்ட மக்கள் - பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட சாலையில் திரண்டனர்.

உடனே அங்கு வந்த அ.தி.மு.க. குண்டர்கள், அதிகாரிகளிடம் பேசி தண்ணீருக்கு ஏற்பாடு செய்கிறோம் என்று கூறி மக்களைத் திசை திருப்ப முயன்றனர். மக்களோ அவர்களைப் புறக்கணித்ததோடு, ''கலெக்டர் வர வேண்டும்; இல்லைன்னா தண்ணீர் வரவேண்டும்'' என்று தங்கள் கோரிக்கையில் உறுதியோடு நின்றனர்.

சிறிது நேரத்தில் அ.தி.மு.க.வின் ஏவல் நாயான டி.எஸ்.பி. பொன். சந்திரசேகர் கண்ணீர் புகை குண்டுகள், வஜ்ரா வண்டி, போலீசு படைகளுடன் அங்கு வந்திறங்கினார். மறியல் செய்த மக்களை உடனடியாகக் கலைந்து செல்ல வேண்டுமென்று மிரட்டினார். ''கலெக்டர் வந்தால்தான் செல்வோம்'' என மக்கள் கூறவும், ''உங்கள எப்படி அடக்கறதுன்னு எனக்குத் தெரியும்டா'' என ஆத்திரத்துடன் கூறிக் கொண்டே, அருகில் நின்ற ஒருவரை 'பளார்' என்று அறைந்தார். கூட்டத்தினர் தன்னைத் தாக்கியதாகக் கூறி தடியடி நடத்த உத்தரவிட்டார். வெறிகொண்ட போலீசுப் படை குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரையும் அடித்து நொறுக்கியது.

சட்டபூர்வமாக எந்த நடைமுறையையும் கடைபிடிக்காத டி.எஸ்.பி., இதற்குமுன் நடைபெற்ற சில சாலை மறியல்களையும் இப்படி தடியடி நடத்திதான் கலைத்துள்ளார். சம்பவம் நடந்த இரண்டு மணிநேரத்தில் அப்பகுதியில் செயல்பட்டு வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர், டி.எஸ்.பி. பொன். சந்திரசேகரின் இந்த அட்டூழியத்தை அம்பலப் படுத்தி ''போலீசு ரவுடி டி.எஸ்.பி.யைக் கைது செய்!'' என்று சுவரொட்டிகளை ஒட்டினர்.

காவிரி பாயும் வளமான பூமியில் ஒரு குடம் தண்ணீருக்கு வக்கற்று போன மக்கள் ஒருபுறம், போராடும் மக்களின் எலும்பெண்ணிப் பார்க்கும் போலீசு அடியாள்படை மறுபுறம்; இதுதான் பாசிச ஜெயாவின் 'பொற்கால ஆட்சி'!

**தகவல்: பு.மா.இ.மு., பள்ளிப்பாளையம்.**

நீரின் தன்மை மாசுபடத் தொடங்கி, குடிக்க நீருமின்றி, உடல்நல பாதிப்புகளுக்கும் அம்மக்கள் உள்ளாகினர். அக்கிராம மக்கள் கோகோ - கோலா நிறுவனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம், சாலை மறியல் முதலான பல்வேறு வழிகளிலும் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

பிளாச்சிமடா கிராம மக்களின் வழியில் சிவகங்கை மாவட்ட மக்களும் கோகோ - கோலா நிறுவனத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் மீது தடியடி நடத்தி ஏறக்குறைய 2000 பேருக்கு மேல் பொய் வழக்கும் போட்டுள்ளது, தமிழகப் போலீசு.

மதுரை, சிவகங்கை மாவட்டங்களில், தா. கிருட்டிணன் கொலையை வைத்து ஆதாயமடையத் துடிக்கும் ஆளும்கட்சியும், எதிர்க் கட்சியும், பரபரப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளும், அப்பகுதி மக்களின் உயிராதாரமான இப்பிரச்சினையைப் பற்றி வாயைத் திறக்கவில்லை. தமிழக அரசோ, இச்சட்ட விரோத நடவடிக்கையைக் கண்டு கொள்ளாததோடு கோக் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தங்களைப் போட்டு கதவை அகலத் திறந்து வைத்துள்ளது.

இந்நிலையில், மனு கொடுப்பதாலோ, சட்ட வரம்புக்குட்பட்ட போராட்டங்களாலோ இப்பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது. கோக், பெப்சி குளிர்பானங்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை நாடு முழுவதும் பிரச்சார இயக்கமாகக் கொண்டு செல்வதும், இதை உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டமாக விரித்துச் செல்வதுமே இன்றைய தேவை. அதன் மூலமாகவே சக்தி சர்க்கரை ஆலை முதலான தேசத் துரோக ஆலைகளை முற்றுகையிடுவதற்கான மக்கள் சக்தியைத் திரட்ட முடியும். நம் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் முடியும்.

❑ கவி


படிப்பகம்

www.padippakam.com

# 'காணாமல்' போகும் காசுமீரிகள்

**கா**சுமீரில், காணாமல் போனவர்களின் பெற்றோர் அமைப்பு, கடந்த ஏப்ரல் மாதம் 17-ந் தேதியிலிருந்து 24-ம் தேதி வரை உண்ணா விரதப் போராட்டத்தை அறிவித்தது. இவ்வமைப்பின் அறிக்கையின்படி 8,000 காசுமீர் மக்களை இதுநாள் வரையில் காணவில்லை. காசுமீர் மாநில சட்டமன்றத்திலும் இப்புள்ளி விவரங்கள் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் வேதனை என்னவென்றால், அரசு புள்ளி விவரப்படி இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட எல்லை தாண்டிய தீவிரவாதிகளைவிட, அரசு பயங்கரவாதத்தால் காணாமல் போன காசுமீர் மக்களின் எண்ணிக்கை அதிகம். அரசில் பதிவு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களே இதை அறிவிக்கின்றன.


2001 முதல் 2003 ஏப்ரல் வரை இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட எல்லை தாண்டிய தீவிரவாதிகளின் எண்ணிக்கை 955. இதில் எல்லைக் கோட்டில் வைத்து கொல்லப்பட்டவர்கள் 280. காசுமீருக்கு உள்ளே பூன்ச் மாவட்டத்தில் கொல்லப்பட்டவர்கள் 670. இதில் 'தவறுதலாக' கொல்லப்பட்ட சிவிலியன்கள் எத்தனை பேர் என்ற விபரம் இல்லை. ஆனால், இதே ஆண்டுகளில் காணாமல் போன காசுமீர் மக்களின் எண்ணிக்கை 3,744 பேர்.

ஆனால், காணாமல் போனவர்கள் பற்றியான எந்தவொரு செய்தியும் இதுநாள்வரையில் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு எந்தவொரு நிவாரணமும், நீதியும் இதுநாள்வரையில் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை அரசின் பல மட்டங்கள் வரை சென்று நீதி கேட்டும் விடிவு பிறக்கவில்லை. காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் நிலைமைகள் பற்றி உள்ளூர் நாளிதழ்களிலிருந்து சர்வதேச மனித உரிமைகள் கழகம்வரை புகார் அளிக்கப்பட்ட பிறகும் இதற்கெதிராக மைய, மாநில அரசுகள் எந்தவொரு முன்முயற்சியும் எடுக்கவில்லை. பருக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டு கட்சியின் ஆட்சி முதல் தற்போதைய முப்தி முகமது தலைமையிலான கூட்டணி அரசாங்கம் வரை இதுதான் நிலைமை.

காணாமல் போனவர்கள் என்றால், ஏதோ திருவிழா கூட்டத்தில் வழிதவறி தொலைந்து போனவர்களோ, அல்லது குடும்பத்தில் பிணக்கு ஏற்பட்டு ஓடிப் போனவர்களோ அல்ல. மாறாக, அனைவரும் போலீசு, இராணுவம், உளவுப்படை இவற்றின் தேடுதல், விசாரணை மற்றும் கைதுக்குப் பிறகு திடீரென காணாமல் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள். அனைவரும் ஆண்கள், நடுத்தர வயதினர், இளைஞர்கள் ஆவர். கணவன், மகன், தகப்பன் என்று ஏழைக் குடும்பங்களின் அன்புக்குரிய நபர்கள் இவர்கள்.

காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள், அவர்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்று ஏறக்குறைய 2 லட்சம் மக்களை ஓட்டு வங்கிகளாகவே பார்க்கின்றன ஓட்டுக் கட்சிகள். ஒவ்வொரு முறையும் தேர்தல் வரும்போது இவர்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்து ஓட்டுகளுக்கு குறிவைக்கின்றன.

காசுமீரில் மக்களைச் சோதனையிடும் போலீசு: 'பயங்கரவாதி'களைத் தேடி அலையும் பயங்கரவாதிகள்.



அரசு, ''காணாமல் போனவர்கள் பற்றிய பரிசீலனைக்கான மாவட்ட ஒருங்கிணைப்பு கமிட்டி''களை அமைத்தது. அதில் பாதுகாப்பு படையின் உயரதிகாரிகளும், அரசின் செல்வாக்கு பெற்ற சில தனிநபர்களும் இடம் பெற்றனர். திருடனிடமே திருட்டைப் பற்றி புகார் அளித்த கதையாகி போனது இது.

பிறகு, மீண்டும் 2000-ஆம் ஆண்டில் உள்ளூர் செய்தித் தாள்களில் ஒரு அறிவிப்பு வெளியானது. காணாமல் போனவர்களின் விபரங்களுடன் அவர்களுடைய உறவினர்கள் மாவட்ட போலீசு கமிஷனர்களை அணுகுமாறு கோரியது. இதனடிப்படையில் மாநிலம் முழுக்க ஏராளமான புகார் மனுக்கள் அளிக்கப்பட்டது. ஆண்டுகள் பல ஓடியும் அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை.

காணாமல் போனவர்களின் சர்வதேச தினமான ஆகஸ்டு 30-ஆம் தேதி 2000-ஆம் ஆண்டு, காணாமல் போனவர்களின் துயரக் கதைகளை உள்ளூர் மற்றும் தேசிய நாளிதழ்கள் வெளியிட்டன. தேசிய மனித உரிமை கமிசன் இச்செய்திகளையே விசாரணை மனுவாக ஏற்று மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. பல்வேறு விசாரணைகளுக்கு பிறகு, மாநில அரசும் நீதித்துறையும் மனித உரிமைச் சட்டங்களை மீறி இருப்பதை மனித உரிமை கமிசன் சுட்டிக் காட்டியது.

பிறகு, 2002-ஆம் ஆண்டில், காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் அமைப்பு, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரிடமும் கையெழுத்து இயக்கம் நடத்தியது. தேசங்கடந்த பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து சர்வதேச மனித உரிமை கமிசனிடம் கையெழுத்து மனுவை சமர்ப்பித்தன. மத்திய, மாநில அரசுகளுக்கும் அதன் நகலை அனுப்பின. இவ்வளவு நடந்த பிறகும் கடந்த 6 மாதங்களில் 26 நபர்களைக் காணவில்லை. போர்க் காலங்களில்



படிப்பகம்

www.padippakam.com

போர்க் கைதிகள் காணாமல் போனால் கூட, அதற்கு காரணமானவர்கள் மீது கிரிமினல் சட்டப்படி தண்டிக்க வேண்டும் என்கிறது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்.

ஆனால், எல்லை தாண்டிய பயங்கரவாதிகள் என்றும், மோதலில் இறந்தவர்கள் என்றும் கொத்து கொத்தாக காசுமீரில் புதைக்கப்படுகிறார்கள். ''ஒரே நேரத்தில், 20 அல்லது 30 பிணங்கள் முகம் சிதைக்கப்பட்டு சதைக் குவியல்களாக இராணுவ ட்ரக்குகளில் கொண்டு வரப்பட்டு புதைக்கப்படுகின்றன'' என்கிறார், சிறீநகரின் இடுகாட்டு காவலாளி அபிபுல்லாகான். ''புதைக்கப்பட்ட பிணங்களைப் பற்றி விபரம் கேட்டு, தங்கள் மகன்களின் அங்க அடையாளங்களைக் கூறி வயதானவர்கள் இங்கு வந்து கேட்பது வழக்கமாகி விட்டது'' என்று வேதனையுடன் கூறுகிறார்.

உண்மையில், எல்லைதாண்டி தீவிரவாதிகள் ஊடுருவும் போது உள்ளூர் போலீசும் இராணுவமும் நேரடியாக மோதாமல், பல நேரங்களில் பின்வாங்கிக் கொள்கின்றன. பிறகு, தீவிரவாதிகளை தேடுதல் என்ற பெயரில் போலீசும், இராணுவமும் உள்ளூர் மக்களை விசாரணை, கைது, சித்திரவதை செய்வதும் கேட்பாரற்று நடக்கிறது. சித்திரவதை முகாம்களுக்கு பலர் கடத்தப்பட்டு ''காணாமல் போனவர்கள்'' ஆக்கப்படுகிறார்கள்.

இந்த இலட்சணத்தில் மாநில அரசு, போலீசு துறைக்கு பெருந்தொகையை ''ரகசியமாக'' ஒதுக்கியிருப்பது, காசுமீர் சட்டமன்றத்தில் அம்பலத்திற்கு வந்துள்ளது. ரூ. 32.35 கோடியை ''மக்கள் நலனுக்கான நடவடிக்கைகளுக்கு'' என்று உயர் போலீசு, ரகசிய நடவடிக்கைகளுக்கு உபயோகித்து இருக்கிறது.

இசுரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் அத்துமீறி நுழைந்து பாலஸ்தீனத்தை இராணுவ நடவடிக்கையின் மூலம் சிதைப்பது போல், இந்திய இராணுவம் காசுமீரில் ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்துகிறது. இன ஒழிப்பு போரை, எல்லை தாண்டிய தீவிரவாதிகளுக்கு எதிரான உள்நாட்டு பிரச்சினையாக ஏமாற்றுகிறது. இதன் மூலம் சர்வதேச ஜனநாயக சக்திகள் இந்திய இராணுவத்திற்கு எதிராக குரல் எழுப்புவதை முடக்குகிறது. இந்த இக்கட்டான நிலைமைகளில் காசுமீர் மக்களைக் காப்பாற்ற ''இந்திய இராணுவமே காசுமீரிலிருந்து வெளியேறு!'' என்ற முழக்கத்தின் கீழ் போராட்டத்தை முன்னெடுத்து ஜனநாயக கடமையாற்ற நாம் முன்வர வேண்டும்.

❑ பச்சையப்பன்

# யார் பயங்கரவாதி?

தருமபுரி எம்.ஜி.ஆர். நகரில் வசித்து வருபவர் விஜயலட்சுமி. வயது 24. இவருக்கு 2 வயதில் பெண் குழந்தை உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இவரது கணவர் இறந்து விட்டார். அப்போது, அக்பர் பாஷா என்ற போலீசுக்காரர் வீட்டில் வேலை செய்தார். பின்னர், அதிக கூலி கிடைக்கவே அதே தெருவில் இன்னொருவர் வீட்டுக்கு வேலைக்குச் சென்று விட்டார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில், போலீசு அக்பர் பாஷா தனது வீட்டில் 18 சவரன் நகையை விஜயலட்சுமிதான் திருடினார் என்றும், அந்நகையை தான் வேலைச் செய்யும் வீட்டுக்காரர்களிடம் கொடுத்துவிட்டதாகவும் எழுதித் தரும்படி மிரட்டினார். இதற்கு விஜயலட்சுமி மறுக்கவே, அக்பர் பாஷா அவரை தென்கரைக் கோட்டை அருகே ஒரு வீட்டிற்குக் கடத்திச் சென்றார். மாந்திரீகம் செய்து நகையைக் கண்டுபிடிப்பதாக அவரை மொட்டையடித்து, சித்திரவதை செய்தார். மேலும், அவரது பிறப்பு உறுப்பு மற்றும் கண்களில் மிளகாய் பொடி தூவி கொடுமைப்படுத்தி வெற்றுப் பேப்பர்களில் கையெழுத்து வாங்கினார். பிறகு, அவரை தருமபுரி நகரப் போலீசில் ஒப்படைத்தார். அங்கு விஜயலட்சுமி கைவிரலில் ஊசி ஏற்றியும் குழந்தையைக் கொன்று விடுவதாகவும் மிரட்டினர். மூன்று நாட்கள் தொடர்ந்து சித்திரவதை செய்து வெளியில் விரட்டினர்.

விஜயலட்சுமி தனக்கு நேர்ந்த சித்திரவதை குறித்து தருமபுரி மாவட்ட எஸ்.பி.க்கு மனு கொடுத்தார். இரண்டு மாதமாகியும் எந்த நீதியும் கிடைக்கவில்லை. ஆனால், போலீசு அக்பர்பாஷாவின் மிரட்டல் மேலும் அதிகமானது. இதனால் விஜயலட்சுமி தன் வீட்டில் குழந்தையுடன் தீக்குளித்தார். இருவரும், ஆபத்தான நிலையில் குற்றுயிராக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மனநிலை பாதிப்படைந்து, குழந்தையுடன் தீக்குளித்ததாக இப்போது வழக்கை மாற்றியுள்ளது, போலீசு.

இதைவிட கொடூரமான பயங்கரவாதம் இருக்க முடியுமா? போலீசுக்காரன்களைவிட பயங்கரவாதி யாராவது இருக்கத்தான் முடியுமா?

மேற்கூறிய போலீசின் கொடுமைகளை எதிர்த்தும், இம்மாதிரியான செய்திகளில் முழு உண்மைகளை வெளியிடாமல் போலீசுக்கு ஆதரவாக இருக்கும் பத்திரிக்கைகளைக் கண்டித்தும் தருமபுரி மாவட்ட வி.வி.மு. சார்பில் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

தகவல்: வி.வி.மு., தருமபுரி.




படிப்பகம்

www.padippakam.com

## ஈராக்:

# புஷ் - பிளேரின் ''பேரழிவுப் பொய்''

ஈராக் மீது இரண்டாவது வளைகுடாப் போரைத் தொடுக்க ஜார்ஜ் புஷ்ஷும், டோனி பிளேயரும் கூறிய காரணம் உண்மையாக இருந்திருந்தால், சதாம் உசேன் போரின் பொழுது கூடப் பயன்படுத்தாமல் ஒளித்து வைத்திருந்த பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை இந்நேரம் கண்டுபிடித்திருக்கலாம். ஏனென்றால், ஈராக்கில் எந்தெந்த இடங்களில் எல்லாம் ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன என்ற பட்டியலை ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதனை ஆய்வாளர்களுக்குக் கொடுத்தவர்களே அமெரிக்காவும், பிரிட்டனும்தான். ஆனால், ''போர் முடிந்து'', அமெரிக்காவின் வெற்றியை அறிவித்து இரண்டு மாதங்கள் ஓடிவிட்ட பிறகும், ஈராக்கில் 200 இடங்களைச் சோதனையிட்ட பிறகும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களால், பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களின் ஒரு துரும்பைக் கூடக் காட்ட முடியவில்லை.

இரண்டாம் வளைகுடாப் போர் தொடங்கிய பிறகு, அமெரிக்காவின் ''டைம்'' இதழ், ''அமெரிக்க இராணுவம் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும்'' என 77 சதவீத அமெரிக்கர்கள் நம்புவதாக ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டது. அப்படி 'நம்பியவர்கள்' ஏமாந்து விடக்கூடாது என்பதற்காக, ''தடை செய்யப்பட்ட சில இரசாயனப் பொருட்கள் அடங்கிய சில பீப்பாய்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக'' ஒரு செய்தி வெளியானது.

ஆனால், கண்டுபிடிக்கப்பட்டவை உண்மையிலேயே இரசாயனப் பொருட்கள் தானா, அவை உண்மையிலேயே தடை செய்யப்பட்டவையா, அவை வைக்கப்பட்டிருந்த கலங்களை பீப்பாய் என அழைக்கலாமா என்பது பற்றியெல்லாம் பரிசோதனை அதிகாரிகளுக்குள்ளேயே ஒத்த கருத்து இல்லாததால், அந்தக் 'கண்டுபிடிப்பை' அப்படியே கைகழுவி விட்டார்கள்.

பிரான்சு நாட்டில் ஜூன் முதல் வாரம் நடந்த பணக்கார நாடுகளின் (ஜி-8) உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள கிளம்புவதற்கு முன்பாக, ஜார்ஜ் புஷ், ''சதாம் உசேன் உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்திய இரண்டு டிரக்குகளைக் கண்டுபிடித்து விட்டதாக'' அறிவித்துவிட்டுதான் விமானம் ஏறினார். இக்கண்டுபிடிப்பின் மூலம், போர் எதிர்ப்பில் முன்னணியில் நின்ற ஐரோப்பிய மக்களைச் சரிகட்டி விடலாம் எனக் கணக்குப் போட்டார், புஷ்.

ஆனால், இக்கண்டுபிடிப்பு பற்றி இணைய தளத்தில் வெளியிடப்பட்ட விவரங்களை ஆராய்ந்த பல்வேறு ஆயுதப் பரிசோதகர்கள், இது இன்னுமொரு மோசடி என அம்பலப்படுத்தி, அமெரிக்காவின் மூக்கை உடைத்தார்கள். ''அந்த இரு டிரக்குகளிலும், உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கத் தேவைப்படும் நோய்க் கிருமி வைரஸ்கள் இருந்ததற்கான அடையாளமே இல்லை; மேலும், உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கத் தேவைப்படும் மிகச் சாதாரண கருவிகள் கூட அவற்றில் இல்லை'' என அவர்கள் உண்மையைப் புட்டு வைத்துள்ளனர்.

அமெரிக்கா, ஈராக்கில் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தேடுவதை உலகமே கண்காணித்துக் கொண்டு இருக்கிறது. இதனால், நம்மூர் போலீசு கஞ்சாவை வைத்துவிட்டுக் குற்றவாளியைக் கைது செய்வது போல, அமெரிக்காவால் நடந்து கொள்ள முடியவில்லை. அதே சமயம், ''ஈராக்கில் ஆயுதப் பரிசோதனை நடத்த 1400 ஆய்வாளர்களை இறக்கி விட்டுள்ளோம்; இன்றும் 700 இடங்களில் ஆயுதப் பரிசோதனை நடத்த வேண்டியிருக்கிறது எனக் கூறி, உலக மக்களின் தலையில் மிளகாய் அரைக்கப் பார்க்கிறது. ஆனால், ஏகாதிபத்தியவாதிகளின் இந்த மழுப்பலை, இரண்டாம் வளைகுடாப் போரை ஆதரித்தவர்கள் கூட, இன்று நம்ப மறுக்கிறார்கள். ஏனென்றால், ''சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்துள்ளார்'', ''உலகில் எங்கு வேண்டுமானாலும் தாக்குதல் நடத்த அவருக்கு 45 நிமிடங்களே போதும்'' என அமெரிக்காவும், பிரிட்டனும் பீதி கிளப்பியதெல்லாம், பச்சையான பொய் - மோசடி என்பதற்கான கூடுதல் ஆதாரங்கள் நாளுக்கு நாள் அம்பலமாகிக் கொண்டே இருக்கின்றன.

✱ இலண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் நாளிதழ், ''அமெரிக்க அரசுச் செயலர் காலின் பாவெல், சதாம் உசேன் ஒளித்து வைத்திருக்கும் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் குறித்த ஆதாரங்கள் பற்றி ஐ.நா. மன்றத்தில் உரையாற்றுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை செயலர் ஜாக் ஸ்ட்ராவை, நியூயார்க் நகரில் உள்ள வால்டார்ஃப் விடுதியில் சந்தித்தார். அப்பொழுது அவர்கள் இருவரும், உளவுத்துறை திரட்டியுள்ள தகவல்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை; அந்த விவரங்கள் அனைத்தும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைத்தான் ஆதாரமாகக் காட்டுகின்றன. உண்மை ஒருநாள்

**உயிரியல் ஆயுதங்கள் இருக்கிறதா என ஈராக் நாட்டு இராணுவ டிரக்கைத் துருவித் துருவி ஆராயும் அமெரிக்கப் படையினர்.**





படிப்பகம்



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்;
சதாமின் சர்வாதிகாரத்தை வீழ்த்திவிட்டு வந்துள்ள அமெரிக்க பாணி ஜனநாயகம்!

நம் முகத்துக்கு நேரே வெடித்துவிடும் எனப் பேசிக் கொண்டனர். அமெரிக்காவை நம்பி போரை ஆதரித்த சில நாடுகள் இப்பொழுது ஏமாந்துபோய், இந்த உரையாடலைக் கசிய விட்டுள்ளன'' என்ற செய்தியை வெளியிட்டுள்ளது.

★ பிரிட்டிஷ் வானொலி நிலையம் பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் உளவுத்துறை அதிகாரியோடு நடந்த நேர்காணலை ஆதாரமாகக் காட்டி, ''பிரிட்டிஷ் உளவுத்துறை திரட்டித் தந்த தகவல்களை டோனி பிளேர் அரசு தனக்குச் சாதகமாக மாற்றி எழுதிக் கொண்டது. பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்த சதாமுக்கு 45 நிமிடங்கள் போதும் எனத் தனது அறிக்கையில் எந்த இடத்திலும் பிரிட்டிஷ் உளவுத்துறை குறிப்பிடவில்லை'' என அவர் கூறியதாக, தனது செய்தி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

★ போருக்குப் பிறகு டோனி பிளேயரின் அமைச்சரவையில் இருந்து வெளியேறிவிட்ட கிளேர் ஷார்ட், ''ஓர் அவசர நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காகவே, உளவுத்துறை தகவல்கள் மீது அரசியல் வலிந்து திணிக்கப்பட்டது. நாங்கள் தவறாக வழி காட்டப்பட்டோம். நாங்கள் ஏமாற்றப்பட்டோம்'' என பிரிட்டிஷ் பிரதமர் மீது வெளிப்படையாகக் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

★ பிரிட்டனின் இராணுவ மந்திரி ஆடம் இங்க்ராம், ''சதாம் 45 நிமிட நேரத்திற்குள் தாக்கக் கூடும் என்ற தகவலுக்குத் தகுந்த ஆதாரங்கள் கிடையாது'' என தற்சமயம் ஒத்துக் கொண்டுள்ளார்.

இவை அனைத்திற்கும் மேலாக, பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகமே, ''ஈராக் மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக, சதாமின் ஆயுதபலம் பற்றி கடந்த பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கை குறைபாடு உடையது'' என ஒத்துக் கொண்டுள்ளது.

இரகசியங்கள் அம்பலமானதையடுத்து பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் டோனி பிளேர், தனது பதவியிலிருந்து விலக வேண்டும் எனக் கோரியுள்ளதோடு, இந்த தில்லுமுல்லினை விசாரிக்க இரண்டு கமிட்டிகளையும் அமைத்துள்ளனர்.

பிரிட்டனைப் போலவே அமெரிக்காவிலும் உளவுத்துறை தகவல்களை, புஷ், ரம்ஸ்ஃபெல்டு, டிக் சேனி கும்பல், தங்களுக்குச் சாதகமாக ஊதிப் பெருக்கிக் கொண்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

★ அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ், ''துணை அதிபர் டிக் சேனி உளவுத்துறையைக் கட்டாயப்படுத்தி, போருக்குச் சாதகமாக அறிக்கை தயாரித்துக் கொண்டார்'' எனக் குற்றஞ் சுமத்தியுள்ளது.

★ நியூஸ் வீக் வார இதழ், ''அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் பென்டகன் மற்றும் இராணுவ மந்திரி ரம்ஸ்ஃபெல்டு ஆதரவோடு பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் தஞ்சமடைந்திருந்த சதாமின் எதிர்ப்பாளர்கள் பேரழிவு ஆயுதங்கள் பற்றிக் கூறியதையே, உளவுத்துறை அறிக்கையாகத் தயாரித்தது'' எனக் குறிப்பிட்டுள்ளது.

★ சி.ஐ.ஏ.வின் முன்னாள் உளவாளிகள் ''அமெரிக்காவின் வரலாறு நெடுகிலும் உளவுத்துறை அறிக்கைகளைத் திரித்துப் புரட்டுவது நடந்திருந்தாலும், இது எல்லாவற்றையும் விஞ்சிவிட்டதாக'' புஷ்ஷுக்கு கடிதம் எழுதியிருக்கின்றனர்.

★ ''பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை புஷ் கண்டுபிடிக்காவிட்டால், இது நிக்சன் காலத்தில் நடந்த 'வாட்டர் கேட்' ஊழலுக்கு நிகரானதாகும்'' என்கிறார் வெர்மோண்ட் மாநிலத்தின் முன்னாள் கவர்னர் ஹோவார்ட் டீன்.

— இக்குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் இராணுவத்துறை கமிட்டியும், செனட் உளவுத்துறை கமிட்டியும் விசாரணை நடத்தப் போவதாக அறிவித்துள்ளன.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான ''சி.ஐ.ஏ.'', ஜார்ஜ் புஷ் கும்பலைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதாலேயே, அது நிரபராதியாகி விட முடியாது. அம்பலப்பட்டுப் போன பிறகு, ஒருவரை ஒருவர் குற்றஞ்சுமத்தித் தப்பித்துக் கொள்ளப்


**இப்போது விற்பனையில்...**

அமெரிக்க ஏகாதிபத்தியம் வழங்கும்

# திடீர் ஜனநாயகம்

ஒன்று வாங்கினால், ஒன்று இலவசம்

**- அருந்ததி ராய்**

(மே, 13, 2003 அன்று, நியூயார்க் நகரின் ஹார்லெம் என்ற கருப்பினச் சேரியில் நடந்த கூட்டத்தில் அருந்ததி ராய் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.)




புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி வெளியீடு; நன்கொடை: ரூ. 10

உலகின் ஆகப் பெரும்பான்மையான மக்கள் மட்டுமின்றி, முதலாளித்துவ ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அறிவுத்துறையினர் பலரும் அமெரிக்காவிற்கும் மறுகாலனியாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகக் குரலெழுப்பத் தொடங்கியுள்ளார்கள். பிரபல எழுத்தாளர் அருந்ததி ராயின் இந்த உரை இதற்குச் சான்று.

**பிரதிகள் கிடைக்குமிடம்**

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

பார்க்கும் நரித் தந்திரம் தான் இது. இதன் மூலம் இந்தப் போரை புஷ் கும்பலின் தனிப்பட்ட விருப்பமாகக் காட்டி, அமெரிக்க மேலாதிக்க அரசு இயந்திரத்தை சைவப் புலியாகக் காட்டிவிட முயலுகிறார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுகளினால் உலக அளவில் அம்பலப்பட்டுப் போயுள்ள புஷ் - பிளேர் கும்பல், ஈராக்கின் பேரழிவு ஆயுதங்களைப் பற்றி புதுக்கதைகளை எடுத்துவிடத் தொடங்கியுள்ளனர். ஜார்ஜ் புஷ், ''சதாம் உசேன் போருக்கு முன்பே ஆயுதங்களை சிரியாவுக்குக் கடத்திப் போய்விட்டதாக''க் கூறி, சிரியாவைக் குறி வைக்கிறார். இராணுவத்துறை மந்திரி ரம்ஸ்ஃபெல்டு, ''போருக்கு முன்பே சதாம் பேரழிவு ஆயுதங்களை அழித்துவிட்டார்'' எனக் கூறி, இந்தப் பொய்யை, மோசடியைக் குழி தோண்டிப் புதைத்து விட முயலுகிறார்.

இது ஒருபுறமிருக்க, ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கப் படைகளின் நிலை, ஆப்பசைத்த குரங்கைப் போலாகிவிட்டது. புஷ் கும்பல் போட்ட திட்டத்தின் படி, அமெரிக்கப் படைகள் இந்நேரம் வீட்டுக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால், ஈராக் நிலையோ எதிர்மறையாகத் திரும்பிவிட்டது. ஈராக்கில் ஒரு கைக்கூலி அரசாங்கத்தைக் கூட அமெரிக்காவால் இன்றுவரை அமைக்க முடியவில்லை. ஈராக் போரில் அமெரிக்கா வெற்றியடைந்துவிட்டதாக ஜார்ஜ் புஷ் கூறிய பின், கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 400 அமெரிக்க சிப்பாய்கள், அமெரிக்க எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; நவீன இரக ''அபாசே'' ஹெலிகாப்டர் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

பாக்தாத் ஃபலுஜா, பாலாத், பாகுபா, திர்ரித், கிர்குக் ஆகிய நகரங்கள் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பின் மையங்களாகத் திகழுகின்றன. வீடுவீடாகத் தேடுதல் வேட்டை, நள்ளிரவுக் கைதுகள், வான்வழித் தாக்குதல் மூலம் இந்த எதிர்ப்பை ஒடுக்கிவிட முயன்று வருகிறது, அமெரிக்கா. ஈராக்கில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடரும் அதேசமயம், தனது படை வீரர்கள் சுடப்பட்டுச் சாவதைத் தடுப்பதற்காகவே இந்திய இராணுவத்தைக் கைக்கூலிப் படையாகப் பயன்படுத்திக் கொள்ளவும், அமெரிக்கா முயன்று வருகிறது.

மேலும், சௌதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவ ஆலோசகர்களின் குடியிருப்பிலும், மொராக்கோவில் உள்ள கேஸபிளான்கா நகரிலும் நடந்துள்ள தொடர்குண்டு வெடிப்புகள், அல்-கொய்தா அமைப்பு இன்றும் செயல் துடிப்போடு இருப்பதை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் அமெரிக்கா நடத்தி வரும் போர், அதற்கு நேர் எதிரான விளைவுகளைத்தான் உருவாக்கும் என்பதை மீண்டும் எடுத்துக் காட்டிவிட்டன. சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்காவின் நிலைமை இன்று புலி வாலைப் பிடித்த கதையாகி விட்டது.

❑ **ரஹீம்**

# நம்பிக்கையான தொடக்கம்




திருச்சி எடமலைப்பட்டி புதூரில் கடந்த மே 28-ஆம் தேதி ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்புச் சங்கத்தின் மூன்று புதிய கிளைகள் தொடங்கப்பட்டன. இம்மூன்று கிளைகளைச்சேர்ந்த உறுப்பினர்களும், மற்ற கிளை உறுப்பினர்களும் சேர்ந்து 150-க்கும் மேற்பட்ட ஆட்டோ தொழிலாளர்கள் சீருடையுடன் அணிவகுத்துத் திறப்பு விழாவிற்கு வந்தனர். திருச்சி புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தலைவர் தோழர் நாராயணசாமி புதிய கிளைகளைக் கொடியேற்றி திறந்து வைத்தார். ஆட்டோ தொழிலாளர்களின் கட்டுக்கோப்பான இந்த அணிவகுப்பைப் பார்த்த மக்கள் ''ஆட்டோ ஓட்டுனர்கள் இப்படியுமா இருப்பார்கள்!'' என்று வியந்து நின்றனர்.

மாலையில், அந்தோணியார் கோவில் அருகில் ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்புச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தோழர் செல்வராஜ் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

எடமலைப்பட்டி புதூர் கிளை செயலாளர் பாலு, ''இந்த மூன்று கிளைகளும் இதற்கு முன் சி.ஐ.டி.யு. சங்கத்தில்தான் இருந்தன. அப்போது ஆட்டோ நிறுத்தம் தொடர்பான இடப் பிரச்சினையைப் போய் சொல்லும் போது, நாளை பேசலாம்! அப்புறம் பேசலாம் தோழரே! என்று சொல்லியே நாள்கணக்காக இழுத்தடித்தார்கள். ஆனால் சந்தா வசூல் செய்ய மட்டும் நேரம் காலம் தவறாமல் வந்து விடுவார்கள்'' என வேதனையுடன் தனது 35 வருட சங்க அனுபவங்களைக் கூறி சி.ஐ.டி.யு. சங்கத்தை அம்பலப்படுத்தினார். ''இந்நிலையில், ஆட்டோ நிறுத்தம் சம்பந்தமான இடப் பிரச்சினையில் தலையிட்டு தீர்த்து வைத்து எங்களால் முடியுமென்பதைக் காட்டிய இந்தச் சங்கத்தில் இணைந்ததற்கு பெருமைப்படுகிறோம்'' என்று குறிப்பிட்டு பேசினார்.

சிறப்புரையாக ம.க.இ.க. தோழர் காளியப்பன், தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தால் அனைத்துப் பிரிவு மக்களும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கால் டாக்சி, ஷேர் ஆட்டோக்களால் ஆட்டோ தொழில் நலிவடைந்து வருவதையும், இன்றைய அரசியல் சூழலில் புரட்சிகர தொழிற்சங்கங்களில் தொழிலாளர்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கியும் உரையாற்றினார்.

இறுதியாக, மக்கள் கலை இலக்கியக் கழக மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

**தகவல்: பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி.**


படிப்பகம்

www.padippakam.com

# போலீசு அதிகாரி பிரேம்குமாருக்கு தருமஅடி! மதுரை வழக்குரைஞர்கள் வழங்கிய தீர்ப்பு!

''போலீசு அதிகாரியைத் தாக்கினார்கள் வழக்கறிஞர்கள்'' என்ற தலைப்பைப் (இந்து, ஜூன்-25) பார்த்தவுடன் ஒருமுறை கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டோம். வழக்கறிஞர்களைப் போலீசு தாக்குவதுதானே தமிழ்நாட்டு மரபு. இது மரபு மீறிய செயலாக இருக்கிறதே, ஒருவேளை அச்சுப்பிழையாக இருக்குமோ என்று ஒரு சந்தேகம். செய்தியைப் படித்த பிறகுதான், இந்தச் சம்பவமே ஒரு 'பிழைதிருத்தம்'தான் என்ற உண்மை புரிந்தது.

சம்பவம் குறித்து இந்து செய்தியாளருக்கு போலீசு தரப்பு தந்துள்ள செய்தியின் சாரம் கீழ்வருமாறு: ''கடலோரப் பாதுகாப்புக் குழுவின் கண்காணிப்பாளரான பிரேம்குமார், தனக்கெதிராக 21 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் ஒரு வழக்கின் விசாரணைக்காக மதுரை விரைவு நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். இந்த வழக்கில் தனக்கெதிராக ஆஜரான வழக்கறிஞர் மகேந்திரனைத் தரக்குறைவான வார்த்தைகளால் அவர் திட்டியதாகத் தெரிகிறது. இது குறித்து நீதிபதியிடம் மகேந்திரன் புகார் செய்தார்.

''என்மேல ஏற்கெனவே 10 கேஸ் இருக்கு. எந்தக் கோர்ட்டும் என்... கூட புடுங்க முடியாது'' எனத் திமிராகப் பேசி வந்த எஸ்.பி. பிரேம்குமார்.



விசாரணை முடிந்தபின் இருவருக்குமிடையில் வாக்குவாதம் தடித்தது. இதைத் தொடர்ந்து மகேந்திரனும் மற்ற வழக்குரைஞர்களும் பிரேம்குமாரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. 'பாதிக்கப்பட்ட' பிரேம்குமாரும் இது குறித்து நீதிபதியிடம் புகார் செய்தார்...

நீதித் துறைக்கும் போலீசுத் துறைக்குமிடையே நல்லுறவைப் பேணவேண்டும் என்ற நோக்கத்திற்காக இரு தரப்பினரும் தமது புகாரைத் திரும்பப் பெற்றனர்.''

- இந்து பத்திரிக்கை கூறும் செய்தியின் சாராம்சம் இதுதான். திருவாளர் பிரேம்குமாரை வழக்குரைஞர்கள் சக்கையாக உரித்து விட்டதாகவும், புரட்டி எடுத்து விட்டதாகவும், ஆடைகள் கிழிந்து அலங்கோலமாகத் தப்பியோடி ஒரு தனியறையில் அமர்ந்து அவர் கதறியழுததாகவும் இந்தச் சம்பவத்தை நேரில் காணும் பேறு பெற்ற பாக்கியசாலிகள் கூறுகின்றனர். இந்தக் காட்சியை மனக் கண்ணில் ஓடவிட்டுப் பார்க்கும் வாசகர்களுக்கு, 21 ஆண்டுகள் முன் அரங்கேறிய இன்னொரு கொடூரமான காட்சியை நினைவுபடுத்துகிறோம்.

1982, பிப்ரவரி முதல் தேதி. அப்போது பிரேம்குமார் வாடிப்பட்டி (மதுரை மாவட்டம்) போலீசு நிலையத்தில் துணை ஆய்வாளர். வீடு காலி செய்வது தொடர்பான பிரச்சினையில் இன்னொரு போலீசு அதிகாரிக்கு ஆதரவாகக் கட்டைப் பஞ்சாயத்து செய்த பிரேம்குமாருக்குக் கட்டுப்பட மறுத்தார் நல்லகாமன் என்ற ஓய்வு பெற்ற இராணுவ வீரர்.

இந்த 'குற்றத்துக்காக' நல்லகாமனை இரத்தம் சொட்டச் சொட்ட தாக்கி, சங்கிலியால் கைகால்களைப் பிணைத்து, உள்ளூரில் ஆசிரியையாக இருந்த அவருடைய மனைவி, மகன் ஆகியோருடன் வாடிப்பட்டி கடை வீதியில் ஊர்வலமாக அடித்து இழுத்துச் சென்றார் எஸ்.ஐ. பிரேம்குமார். பிறகு தன்னைக் கொலை செய்ய முயன்றாதாகப் பொய் வழக்கு போட்டு அவரைச் சிறையில் தள்ளினான்.

நல்லகாமன் கொடுத்த புகார், உள்ளூர் மக்கள் நடத்திய போராட்டம் ஆகியவற்றின் விளைவாக ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தப்பட்டது. பிரேம்குமார் மீது தமிழக அரசின் சார்பில் ஆர்.டி.ஓ.வே கிரிமினல் வழக்கு தொடர்ந்தார். வாய்தாவுக்கு வராமல் 'தலைமறைவாவது', உயர்நீதி மன்றத்துக்கும் உச்சநீதி மன்றத்துக்கும் சென்று வழக்கை இழுத்தடிப்பது - எனப் பல தந்திரங்களைக் கையாண்டு கடந்த 20 ஆண்டுகளாக வழக்கு விசாரணையை முடக்கினார் பிரேம்குமார். இவையெதற்கும் தளராமல் தனது சேமிப்புகள் அனைத்தையும் செலவு செய்து பிரேம்குமாரின் சதிகளை முறியடித்தார் நல்லகாமன்.

ஆனால், கிரிமினல் வழக்கில் தமிழக அரசாலேயே குற்றம் சாட்டப்பட்ட பிரேம்குமாருக்கு காவல்துறை அடுத்தடுத்து பதவி உயர்வு வழங்கி மாவட்டக் கண்காணிப்பாளராக்கியது. தஞ்சை ம.க.இ.க.வைச் சார்ந்த ஆட்டோ தொழிலாளர்களும், திராவிடர் கழகத் தொண்டர்களும் பிரேம்குமாரால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். தஞ்சையில் அடுக்கடுக்கான போலி மோதல்களில் பல சிறு குற்றவாளிகளும் நிரபராதிகளும் கொல்லப்பட்டனர். (இது தொடர்பான விரிவான கட்டுரை அக்'2002 புதிய கலாச்சாரம் இதழில் வெளிவந்துள்ளது.)

தற்போது கடந்த சில மாதங்களாக நடந்து வரும் நல்லகாமன் வழக்கு விசாரணையின்போதும், எடுபிடிகளும் போலீசு பரிவாரங்களும் சூழ ஒரு ரவுடிக் கும்பலின் தலைவனைப் போல நீதிமன்ற வளாகத்தில் பந்தா காட்டிக் கொண்டிருந்தார் திருவாளர் பிரேம்குமார்.

போலீசுக்கு எதிராக இருபது ஆண்டுகளாக போராடி வரும் நல்லகாமன் மற்றும் அவர் மனைவி.



தற்போது வழக்கு முடிவடைய இருக்கிறது. ''தீர்ப்பு எனக்குச் சாதகமாகத் தான் வரப்போகிறது, நீங்கெல்லாம்......... வேண்டியதுதான்'' என்று மிகக் கேவலமான சொற்களால் வழக்குரைஞர் மகேந்திரனை ஏசியிருக்கிறார் பிரேம்குமார்.

இப்படியாக, நல்லகாமன் வழக்கில் விரைவு நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால், மகேந்திரன் வழக்கில் அதிவிரைவாகத் தீர்ப்பு எழுதவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு விட்டார்கள் மதுரை வழக்கறிஞர்கள். அவசரம் கருதி தீர்ப்பு பிரேம்குமாரின் உடம்பின் மீதே எழுதப்பட்டு விட்டது. காகிதத்தில் எழுதப்படும் தீர்ப்புகளைத்தான் போலீசுக்காரர்கள் மதிப்பதில்லையே!

❑ வேல்ராசன்


படிப்பகம்

www.padippakam.com



# இவரல்லவோ வீராங்கனை!

**வ**டக்கே காசுமீரில் இந்திய இராணுவமும் துணை இராணுவப் படைகளும் நடத்திவரும் நரவேட்டை, அதிக்கிரமங்களைப் போலவே, வடகிழக்கு மாநிலங்களிலும் இந்திய இராணுவத்தின் அரச பயங்கரவாதம் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. அதேசமயம், இந்த அட்டூழியங்கள் வெளியே தெரியாமல் மூடிமறைக்கப் படுகின்றன. இந்திய இராணுவத்தின் அதிக்கிரமங்கள் - அடக்குமுறைகளுக்கு எதிராக எந்தவொரு ஓட்டுக் கட்சியும் போராட முன்வராமல் தேச ஒற்றுமை பஜனை பாடிக் கொண்டிருக்கும் நிலையில், ஐரோம் சர்மிளா என்ற இளம் பெண், இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள், அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராகத் தொடர்ந்து உறுதியாகப் போராடி வருகிறார்.

மணிப்பூர் மாநிலத்தின் தலைநகர் இம்பாலிலுள்ள மாலோம் எனுமிடத்தில் அசாம் துப்பாக்கிப் படையின் வாகனத்தின் மீது தேசிய சுயநிர்ணய உரிமைப் போராளிகள் கடந்த 2000-வது ஆண்டு நவம்பர் முதல் நாளன்று குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பழிவாங்கும் வெறியோடு அசாம் துப்பாக்கிப் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 10 அப்பாவி சிவிலியன்களைக் கொன்று வெறியாட்டம் போட்டனர். தேடுதல் வேட்டை என்ற பெயரில் 4 பெண்கள் உட்பட 42 பேரை மிருகத்தனமாகத் தாக்கி படுகாயப்படுத்தினர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னரும் இன்னமும் அவர்களால் எழுந்து நடமாட முடியவில்லை.

சமூக சேவகியும் மகளிர் உரிமைப் போராளியுமான சர்மிளா, இந்திய துணை இராணுவப் படையின் இக்கொலை வெறியாட்டத்தைக் கண்டு வெகுண்டெழுந்தார். இராணுவப் படைகளின் அட்டூழியங்களுக்குச்சட்டபூர்வ அங்கீகாரமளிக்கும் 1958-ஆம் ஆண்டின் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; குடியுரிமை - ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் 2000-வது ஆண்டு நவம்பர் 2-ஆம் நாளன்று அவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். தற்கொலைக்கு முயற்சித்தார் என்றுமூன்றாவது நாளில் அவர் கைது செய்யப்பட்டு சிறையிடப் பட்டார்.

சிறையில் கட்டாயமாகத் திணிக்கப் பட்ட உணவை ஏற்க மறுத்து கடந்த ஈராண்டுகளுக்கும் மேலாக அவர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறார். அவருக்கு மூக்கு வழியாக வலுக்கட்டாயமாக திரவ உணவு செலுத்தப்படுகிறது. கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் வீராங்கனை சர்மிளா, வாய் வழியாக எந்த உணவையும் இன்று வரை உண்ண மறுத்து இராணுவ அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்.

**இராணுவ அட்டூழியங்களுக்கும் கருப்புச் சட்டங்களுக்கும் எதிராக உறுதியாகப் போராடிவரும் வீராங்கனை சர்மிளா, இன்றோ அல்லது நாளையோ மரித்துப் போகலாம். ஆனால், அவரது போராட்ட உறுதியானது கோடானுகோடி மக்களை உணர்வு கொள்ளச் செய்யும்.**



மாநில அரசாங்கமோ அவரது கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டது. அவர் மீதான பொய் வழக்குகளைக் கைவிட்டு விடுதலை செய்யவும் மறுத்துவிட்டது. ஓட்டுக் கட்சிகளோ, மணிப்பூர் மக்களின் உரிமைக்கும் ஜனநாயகத்துக்குமான அவரது நியாயமான கோரிக்கையை வாயளவில் ஆதரிக்கக்கூட முன்வராமல் ஒதுங்கிக் கொள்கின்றன. மாநில முதல்வரிடம் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ரத்து செய்வது பற்றி பேச அனுமதிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை நீதித்துறையும் நிராகரித்து விட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சர்மிளாவின் படுக்கையைச் சுற்றி ஆயுத போலீசார் நிற்கின்றனர். இரகசிய போலீசார் கண்காணிக்கின்றனர். போலீசு தலைமை இயக்குனர், முதுநிலை போலீசு தலைமைக் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் சிறப்பு அனுமதி பெற்ற பின்னரே எவரும் சர்மிளாவைச் சந்திக்க முடியும். பத்திரிகையாளர்கள் கூட அவரைச் சந்திக்கவும் பேட்டி காணவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அநீதி, அவமதிப்பு, அலட்சியப்படுத்தல், அச்சுறுத்தல் என்று எல்லா வழிகளிலும் ஆட்சியாளர்கள் அடக்கிய போதிலும், மனந்தளராமல் சர்மிளா உறுதியுடன் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். உடல் மெலிந்து, இரத்த சோகையால் தோல் வெளுத்து, எழுந்து நிற்கக் கூடத் திராணியற்றுப் போயுள்ள அவரது உடல்நிலை பற்றிய மருத்துவ அறிக்கையைக் கூட, கொலைகார இராணுவத்தின் கைப்பாவையாக உள்ள மாநில அரசு வெளியிட மறுக்கிறது.

இராணுவ அட்டூழியங்களுக்கும் கருப்புச் சட்டங்களுக்கும் எதிராக உறுதியாகப் போராடிவரும் வீராங்கனை சர்மிளா, இன்றோ அல்லது நாளையோ மரித்துப் போகலாம். ஆனால், அவரது போராட்ட உறுதியானது கோடானுகோடி மக்களை உணர்வு கொள்ளச் செய்யும். அது எரிமலையாக வெடித்தெழுந்து இராணுவ அடக்குமுறைகளையும் கருப்புச் சட்டங்களையும் சுட்டெரித்து சாம்பலாக்கவே செய்யும்.

❑ குமார்


படிப்பகம்

www.padippakam.com



# நவீன கொத்தடிமைகளின் நகரம்

"புதிய இரத்தப் பாய்ச்சலும், களை அகற்றலும், அதை உரிய நேரத்தில் செயல்படுத்துதலும் இன்று நமது நிர்பந் தங்கள்." டி.வி.எஸ். குழுமத்தால் வெளியிடப்படும் "சுந்தர இணைப்பு" எனும் காலாண்டிதழில் (ஏப்-ஜூன் 2001) இந்த வாக்குமூலம் வெளியாகியுள்ளது. "சுந்தரம் பாசனர்ஸ்" நிர்வாக இயக்குனரான சுரேஷ் கிருஷ்ணா, தனது நிறுவ னத்தின் தொழிலாளர்களுக்கு எழுதிய துதான் இந்தப் பொன் (புண்) மொழி.

வேலைதேடி அலையும் இளைஞர் களை புதிய இரத்தப் பாய்ச்சலுக்காக மீண்டும் மீண்டும் தினக்கூலிகளாக மாற்றி, உழைப்பைச் சுரண்டி ருசி கண்டதால் ஏற்பட்ட திமிர்தான், அவரை இவ்வாறு பேச வைத்துள்ளது. நிரந்தரத் தொழிலாளர்களை உரிய நேரத்தில் களை எடுத்தால் தானே, தினக் கூலிகளின் புதிய இரத்தப் பாய்ச்சல் சாத்தியமாகும்! இதற்கும் அதே கட்டுரையில் சுரேஷ் கிருஷ்ணா பதில் சொல்கிறார்: "மாத்திரையால் குணமாகாத வியாதிக்கு அறுவை சிகிச் சையே வழி."

தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புவது தான் அவரது அறுவை சிகிச்சை வைத்தியம். சுரேஷ் கிருஷ்ணா போன்ற தரகுப் பெருமுத லாளிகளின் அறுவை சிகிச்சைக்குத் தேவையான ஆயுதங்களை ஆட்சியா ளர்கள் கூர்தீட்டிக் கொண்டிருக்கி றார்கள். இரண்டாவது தொழிலாளர் ஆணையப் பரிந்துரை என்பது அதில் முதன்மை யான ஆயுதம்.

ஆனால், இரண்டாவது தொழிலாளர் ஆணைய பரிந்துரை நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே நிரந்தரத் தொழிலாளர் முறையை ஒழிக்க தீவிரம் காட்டி வருகின்றனர், ஓசூர் தொழிற்பேட்டை முதலா ளிகள். ஈசன் ரீரோல் நிறு வனம் 120 நிரந்தர தொழி லாளர்களை கட்டாய ஓய்வுத் திட்டத்தின் கீழ் வீட்டுக்கு அனுப்பத் துடிக்கிறது. லேலண்ட் 32 பேரை விரட்டி யுள்ளது. உமா மகேஸ்வரி, பிரீமியர் மில்கள் நிரந்தரத் தொழிலாளர்களை முற்றாக ஒழித்து விட்டன. 1500-க்கும் மேற்பட்டோர் வேலை செய்யும் ஆர்.சி.ஐ. நிறுவனத்தில் இன்று 250 பேர் மட்டுமே நிரந்தரத் தொழிலாளிகள். ஜி.இ.பவர், ஏ.டி.சி., இந்துஸ்தான் மோட்டார்ஸ் என எல்லா நிறுவனங்களும் கட்டாய ஓய்வுத் திட்டத்தை அறிவித்து, நிரந்தரத் தொழி லாளர்களைக் குறைத்து வருகின்றன.

டி.வி.எஸ். குழுமத்தின் மிகப் பெரிய நிறுவனமான சுந்தரம் பாசனர்ஸ், ஐந்தாண்டுகளுக்குமேல் பணிபுரிந்த இளம் தொழிலாளர்கள் 55 பேரை சட்டவிரோதமாக விரட்டியடித் துள்ளது. டி.வி.எஸ். நிறுவனத்தில் மட்டும் கடந்த பத்தாண்டுகளில் 20,000-க்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள், தற்காலிக ஊழியர் - ஒப்பந்த ஊழியர் என்ற முறையில் சுரண்டப் பட்டு, பின்னர் வேலையிலிருந்து வீசி யெறியப்பட்டுள்ளனர்.

பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு தொழில் நகரமாகக் காட்சியளித்த ஓசூர், இன்று அடுத்தடுத்த ஆலை மூடல் - ஆட்குறைப்புகளால் வெறிச் சோடிக் கிடக்கும் நகரமாகி விட்டது. எஞ்சிய ஆலைகளிலும் நிரந்தரத் தொழிலாளர்கள் விரட்டப்பட்டு, தற்கா லிக - ஒப்பந்த ஊழியர்களைக் கொண்டு உற்பத்தியை நடத்தும் நவீன கொத்தடிமை முறை நிறுவப்பட்டுள் ளது. இச்சட்ட விரோத சுரண்டலை எதிர்த்து தொழிற் சங்கம் அமைக்க முயன்றால், அதையே சாக்காக வைத்து பல நிறுவ னங்கள் ஆலையை மூடி அச்சுறுத்து கின்றன. கார்பொரண்டம் மற்றும் சில நிறுவனங்களில் சங்கமாக அணிதிரண் டவர்களை ஒட்டுமொத்தமாக வேலை நீக்கம் செய்துள்ளனர்.

தொழிலாளர்களின் உரிமைகளைக் கேட்கக்கூட சங்கமாக சேரக்கூடாது என்பதுதான் இரண்டாவது தொழி லாளர் ஆணையத்தின் பரிந்துரை. பரிந்துரைத்தவர்கள் முதலாளிகள் அல்லவா? அதனால்தான் பரிந்துரை நிறைவேற்றப்படும் முன்பாகவே, சங்கங்களையே தடை செய்துள்ளனர். இன்று ஓசூர் தொழிற்பேட்டையில் தொழிற்சங்கம் கூட தொடங்க முடி யாது என்ற பயங்கரவாதம்தான் நிலவு கிறது. முதலாளிகளின் அடியாளாகவே போலீசு செயல்படுகிறது.

"புதிய இரத்தப் பாய்ச்சல்" என்பது வார்த்தையாகச் சொல்லப்பட்ட உவமை அல்ல. அது இரத்தமும் சதை யுமான உண்மை. போதிய பயிற்சியும் முன் அனுபவமும் இல்லாத இளைஞர் களை நேரடியாக இயந்திரங்களில் பணி செய்ய அனுமதிக்கிறார்கள். அதிலும் முழுமையான உற்பத்தியை நிர்பந்தப்படுத்தி பெற்றுக் கொள்கி றார்கள். விளைவு; நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தங்களது கை விரல் களை மட்டுமல்ல, கைகளையே




படிப்பகம்

www.padippakam.com

இயந்திரங்களுக்குக் காவு கொடுத்துள் ளார்கள்.

இப்படி விபத்துகளில் பாதிக் கப்பட்டவர்களை அரசு மருத்துவம னைக்கோ, ஈ.எஸ்.ஐ. மருத்துவம னைக்கோ கொண்டு செல்வதில்லை. ஏனெனில் விபத்துகள் பதிவாகி, இழப் பீடு - பணிபாதுகாப்பு போன்ற சட்ட பூர்வ உரிமைகளை பாதிக்கப்பட்டவ ருக்குத் தரவேண்டியது கட்டாயமாகி விடும். எனவே, விபத்து நடந்தால் ஒசூ ரிலுள்ள தனியார் மருத்துவமனையி லேயே முதலுதவி அளித்து விரட்டி விடுகின்றனர்.

தனியார்மயமும் தாராளமயமும் செயல்படுத்தப்பட்ட கடந்த பத்தாண்டு களில், ஓசூரில் தேசிய தொழில் - சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்து ஒழிக்கப்பட்டு விட்டன. பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், தரகுப் பெரு முதலாளித்துவ நிறுவனங்கள், அவற் றிடம் காண்டிராக்ட் வேலை எடுத்து செய்யும் நிறுவனங்கள் - ஆகியனவே இன்று ஓசூரில் இயங்குகின்றன. இவற்றின் முதலாளிகள் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, சட்டவிரோதமாக அனைத்து அடக்குமுறைகளிலும் ஈடு பட்டு வருகின்றனர். ஓட்டுக் கட்சி களின் தொழிற்சங்கங்களோ பிழைப்பு வாதத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. சில தொழிற்சங்க பிரமுகர்கள் ''செட்டில்மெண்ட் தாதா''க்களாக மாறி விட்டனர். மொத்தத்தில் ஓசூர் நகரம் முதலாளிகளின் சொர்க்கபூமியாகவும், தொழிலாளர்களின் மயானபூமியா கவும் மாறிவிட்டது.

இந்த அவலங்களையும் அடக்கு முறைகளையும் எதிர்த்து தொழிலாளர் களிடம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, அதன் தொடர்ச்சியாக கடந்த ஜூன் 20-ஆம் நாளன்று ஓசூர் - ராம்நகர் அண்ணா சிலையருகே கண்டன ஆர்ப்பாட் டத்தை நடத்தியது. ''தொழிலாளர் களை நவீன கொத்தடிமைகளாக்காதே! நாட்டையும் மக்களையும் மீண்டும் அடிமையாக்கும் பன்னாட்டுக் கம்பெ னிகளின் சதித்திட்டத்தை முறிய டிப்போம்!'' என்ற முழக்கத்துடன் நடந்த இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம், குமுறிக் கொண்டி ருக்கும் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

– புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஓசூர்.

# ஏகாதிபத்திய பொறியில் சிக்கிய புலிகள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையிலான இலங்கை அரசாங்கத் துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமா தானப் பேச்சுவார்த்தை கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து படிப்படியாக வேகம் குறைந்து தற்போது தேக்க நிலையை எட்டியிருக்கிறது. இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு, போர் நிறுத்தம் என்பதை நேசித்த சிங்கள - தமிழ் மக்களிடையே பெரும் அவநம் பிக்கை தோன்றியுள்ளது. தற்போ தைக்கு அவர்களுக்குள்ள ஒரே ஆறுதல் சிற்சில ஒப்பந்த மீறல் சம்ப வங்கள் நடைபெற்ற போதும் கடந்த 15 மாதங்களாக போர் நிறுத்தம் நீடிப் பதுதான். ஆனால், அதேசமயம் எப்போது வேண்டுமானாலும் மீண்டும் போர் வெடிக்கும் என்கிற அச்சம் எங்கும் பரவி நிற்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளும் தீர்வுகளும் போர்களைப் போல எப்போதும் வெளிப்படையான, நேர டியான, எளிய கூறுகளைக் கொண்டி ருப்பதில்லை. மிகவும் இரகசியமான நிர்பந்தங்கள் - காரணங்களையும் போக்குகள் - உடன்பாடுகளையும் கொண்டதாக இருக்கின்றன. இதனால் அவநம்பிக்கையும் ஏமாற்றமும் தவிர்க்க முடியாதவைகளாக இருக்கின் றன.

முதலாளித்துவ அரசு தந்திரம் என்பது எப்போதும் பித்தலாட்டங் களின் மொத்த உருவமாகவே இருக் கின்றன. மிகவும் மேலோட்டமான வாசகங்களால் உண்மைகளை மூடிம றைத்தும், பலபொருள் கொள்ளும் சொற்களால் நிரப்பியும் சம்பந்தப்பட்ட நாடுகளின் மக்களை மட்டுமல்ல, தம்மைத்தாமே குழப்பி மோசடி செய்யும் அறிக்கைகளையும் ஒப்பந் தங்களையும் உற்பத்தி செய்வதற்குப் பெயர் அரசு தந்திரமாக உள்ளது. பருண்மையான நடைமுறை என்று வரும்போது குட்டு வெளிப்பட்டு அசிங்கமான அதிர்ச்சிகரமான திருப் பங்கள் ஏற்படுகின்றன.

சமாதானப் பேச்சு வார்த்தைகளும் உடன்படிக்கைகளும் இப்படித்தான். சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கும்போது, அதற்கு முந்தைய மோதல் நிலைமைக்கான காரணங் களை ஒதுக்கி வைத்துவிட்டு, அடிப்ப டையான மையமான பிரச்சினை களைத் தொடாமல், சம்பந்தப்பட்ட தரப்பினர் தமது சொந்த நலன்கள், நிலைப்பாடுகள் அப்படியே நிலவு கையில், விளிம்பைத் தொட்டுச் செல்லும் தொடுகோடு வரைவது போல நல்லெண்ணத்தை வெளிப்ப டுத்தும் சொல்லலங்காரங்களால் பூசி மெழுகியவாறு சமாதான துவக்க அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

ஆனால், பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நகரும்போது, பருண்மை யான - நடைமுறை முடிவுகள் எடுக்க வேண்டிய சமயம் வரும்போது நல்லெண்ண சொல்லலங்காரங்கள் கலைந்து போகின்றன. சம்பந்தப்பட்ட இருதரப்பும் ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டுவதும், அடுத்த சுற்று மோதலுக்கான தயாரிப்பில் ஈடுபடு வதும் நடக்கின்றன. அந்த நிலைதான் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையி லான சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் ஏற்பட்டுள்ளது.

2002-ஆம் ஆண்டு பிப்ரவரியில், நார்வே நாட்டு அரசின் முயற்சியால் இலங்கை அரசாங்கத்துக்கும் விடு தலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடை யிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. இரு தரப்புக்கும் இடையில் இதுவரை ஆறு அமர்வுகள் நடந்துள்ளன. ஆனாலும் சமாதான முன்னெடுப்புகள் மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம், சமாதானப் பேச்சு வார்த்தையில் இருந்து விலகி நிற்பதாக கடந்த ஏப்ரல் 21-இல் ஒருதலைப் பட்சமாக அறிவித்தது. அதன்பிறகு ஜூன் 9-10 தேதிகளில் ஜப்பான் தலை நகர் டோக்கியோவில் நடந்த இலங்கை - ஈழப் புனரமைப்புக்கான உதவி



படிப்பகம்

www.padippakam.com

வழங்கும் நாடுகளின் மாநாட்டை புறக்கணித்தது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இருந்து விடுதலைப் புலிகள் விலகி நிற்பது என்ற முடிவுக்கு வந்ததற்கானஉடனடியான நேரடியான காரணம், இலங்கை - ஈழம் புனரமைப்புக்கான உதவி குறித்து அமெரிக்காவின் வாஷிங்டனில் ஏப்ரல் 14-15 தேதிகளில் நடந்த கருத்தரங்கத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் அழைக்கப்படவும் இல்லை, அதற்குரிய கடவுச் சீட்டு வழங்குவதற்கு அமெரிக்காவும் மறுத்துவிட்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று அறிவித்துத் தடை செய்திருக்கிறது அமெரிக்கா. அந்த அறிவிப்பும் தடையும் இன்னமும் நீடிக்கிறது. அதே போல செய்துள்ள இந்திய அரசு, விடுதலைப் புலிகளின் பிரதிநிதியுடன் அமர்ந்து பேசுவதற்கு மறுத்ததாலும், வாஷிங்டன் கருத்தரங்குக்கு புலிகள் அழைக்கப்படவில்லை.

இலங்கையில் நடந்து வந்த உள்நாட்டுப் போரை நிறுத்தி, சமாதானத் தீர்வு காணும்படி அமெரிக்கா உட்பட பல நாடுகள்தாம் நிர்பந்தம் கொடுத்து வந்தன. அதை ஏற்றுப் போர் நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் போட்டு, பேச்சு வார்த்தைகளும் நடந்து வந்த நிலையில், அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகள் புலிகள் மீதான தடையை நீக்கிவிடுவது இயல்பாக நடக்கும் என்று புலிகள் இயக்கம் நம்பியது. இதைச் சோதித்தறியும் வகையில் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இடமளிக்கும்படியும், புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் சிகிச்சை பெற அனுமதிக்கும்படியும் இந்தியாவிடம் புலிகள் கோரினர். ஆனால், இதற்கெல்லாம் மறுப்புத் தெரிவித்ததன் மூலம் அமைதிப் பேச்சு வார்த்தைக்கு இந்தியா வாயுபச்சாரம் மட்டுமே அளிப்பது நிருபணமாகியது.



**டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகளைக் கலந்து கொள்ளச் செய்வதற்காக, புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திய நார்வே நாட்டுக் குழுவினர்.**

சமாதானப் பேச்சு வார்த்தையின் முன்னேற்றத்தை ஒட்டியே இலங்கை - ஈழப் புனரமைப்புக்கான பன்னாட்டு நிதி உதவி கிடைக்கும், அதுவும் இலங்கை அரசிடம் தரப்படமாட்டாது, புனரமைப்புக்கான ஓர் இடைக்கால நிர்வாகத்திடம்தான் தரப்படும், அத்தகைய நிர்வாகத்தில் தமது அமைப்பு முக்கியப் பங்கு வகிக்கும் என்றெல்லாம் புலிகள் கணக்குப் போட்டு வைத்திருந்தனர். ஆனால், இவ்வாறான ஏற்பாடுகள் வருவதற்கு முன்பாகவே இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்க - இந்திய அரசுகள் பல பொருளாதார உடன்பாடுகள் செய்து கொண்டு நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்து விட்டன.

இவற்றால், சமாதான முன்னெடுப்புகள் தாம் எதிர்பார்த்த திசையில் முன்னேறும் என்ற நம்பிக்கை இழந்த விடுதலைப் புலிகள், டோக்கியோ மாநாட்டைப் புறக்கணிப்பது என்று முடிவு செய்தனர். இருந்தாலும், புலிகள் அமைப்புக்கு பன்னாட்டு நிர்பந்தத்தை மேலும் தீவிரப்படுத்தும் நோக்கில், நார்வே மற்றும் ஜப்பானியப் பிரதிநிதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி முகாமில் அதன் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்தனர். டோக்கியோ மாநாட்டில் பங்கேற்கும்படி அவர்கள் விடுத்த அழைப்பைப் பிரபாகரன் நிராகரித்தார்.

வட - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை முழுமையாகவும் உடனடியாகவும் அமைக்க வேண்டும்

**டோக்கியோ மாநாடு முடிந்த பின், பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கும் அமெரிக்கத் துணைச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் (இடது), ஜப்பானிய சிறப்புத் தூதர் யாசுஷி அகாஷி (நடுவில்), மற்றும் இலங்கை அரசியல் சாசனத் துறை அமைச்சர் காமினி பெரிஸ்.**




படிப்பகம்

www.padippakam.com

என்கிற கோரிக்கையை வலியுறுத்தி இலங்கைப் பிரதமருக்கும், நார்வே அரசுக்கும் பாலசிங்கம் கடிதம் எழுதினார். அத்தகைய ஏற்பாடு இல்லாமல் பன்னாட்டு நிதி கிடைத்தாலும் புனரமைப்புப் பணிகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்பதால் டோக்கியோ மாநாட்டைப் புறக்கணிப்பது என்ற முடிவில் புலிகள் அமைப்பு உறுதியாக நின்றது. புலிகளின் கோரிக்கையில் வேறு உள்நோக்கங்கள் இருப்பதாக புனரமைப்புக்கு உதவி தரும் நாடுகளை ஏற்க வைத்த இலங்கை அரசாங்கம், புலிகளின் பங்கேற்பு இல்லாமலேயே, எதிர்பார்த்ததை விடக் கூடுதலான நிதி உதவி பெறுவதிலும் ''வெற்றி'' பெற்றது.

3000 அல்லது 3500 கோடி டாலர் நிதி உதவி மட்டுமே கிடைக்கும் என்று எதிர்பார்த்த இலங்கைக்கு 4500 கோடி டாலர் நிதி உதவியை டோக்கியோ மாநாட்டில் உறுதி செய்து கொண்டது; 51 நாடுகளும் 22 சர்வதேச அமைப்புகளும் மூன்று ஆண்டு காலத்தில் இந்த நிதியை அளிக்கும்.

''இரண்டு தரப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமலாக்குவது; வடகிழக்கில் புனரமைப்புப் பணியை நேர்த்தியாக அமலாக்க ஒரு செயல்திறன் மிக்க நிர்வாகத்தை உருவாக்குவது; முசுலீம் பிரதிநிதிக் குழுவை சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க வைப்பது; கூடவே அரசியல் தீர்வை எட்டுவதற்கு முயல்வது; போரால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது; அனைத்துப் பிரிவு மக்களின் மனித உரிமையை உத்திரவாதப்படுத்துவது; சமாதான முன்னெடுப்புகளிலும், அரசியல் தீர்வு கொண்டு உருவாக்கப்படும் அமைப்புகளிலும் பெண்களின் சமமான பங்கேற்பை உறுதி செய்வது; சிறுவர்களை இராணுவத்திலும் போரிலும் ஈடுபடுத்துவதைத் தடுத்து, அவர்களது வாழ்வைப் புனரமைப்பது; போரினால் பாதிக்கப்பட்ட போராளிகளுக்கும் மக்களுக்கும் தகுந்தவாறு மறுவாழ்வளிப்பது; மோதல் - முறுகல் போக்கை முற்றாக அகற்றி, இயல்பு வாழ்க்கையையும், அமைதியையும் உத்திரவாதம் செய்யும் வகையில் இராணுவ விலக்கம் அமலாக்கப்பட வேண்டும்'' என்று டோக்கியோ பிரகடனம் கூறுகிறது. இவை அமலாக்கப்படுவதை ஒட்டி தவணை முறையில் பன்னாட்டு நிதி வழங்கப்படும்.



**இதற்குமுன்பு நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் போரில் குதித்தபோது இருந்த நிலைமைகள் இப்போது இல்லை. சர்வதேச அளவில் அவர்கள் மிகவும் தனிமைப்பட்டு விட்டார்கள். ஆயுத வியாபாரிகள் மட்டுமே அவர்களின் நட்பு சக்திகளாக உள்ளனர்.**

இந்த நிகழ்வுகளால், சமாதானப் பேச்சு வார்த்தை இரண்டு தரப்புக்கும் இடையிலான இடைவெளியையும் முரண்பாடுகளையும் அதிகரித்துக் கொண்டே போவது தெரிகிறது. சமாதான முன்னெடுப்பின் மையமான களப் பிரச்சினைகள் நகராமல் இறுகிப் போயிருக்கின்றன. போர் நிறுத்தம் அமலாக்கப்பட்டாலும் அவரவர் இராணுவ நிலைகளில் ஊன்றி நிற்கின்றனர். ஒருபுறம் இலங்கை அரசின் இராணுவம் ''அதிஉயர் பாதுகாப்பு வளையம்'' என்று அறியப்படும் பகுதிகளில் இருந்து விலகி படை முகாம்களுக்குத் திரும்புவது எப்படி என்கிற பிரச்சினை. மறுபுறம் கிரமமான இணையான இராணுவ அமைப்புகளையும் ஆயுதங்களையும் கொண்டுள்ள புலிகள் இயக்கம் எவ்வாறு மைய அரசியல் - நிர்வாக நீரோட்டத்தில் கலப்பது என்கிற பிரச்சினை.

இராணுவ ரீதியில் இரண்டு தரப்புமே அழுந்தி நிற்கின்றன; மேலும் தமது பலத்தை வலுப்படுத்தவே எத்தணிக்கின்றன. இலங்கை இராணுவத்துக்கான ஆயுதக் குவிப்பும், அந்நிய நாடுகளுடனான இராணுவ ஒப்பந்தமும் சுயாதிபத்தியமுடைய, சட்டபூர்வமான அரசின் நடவடிக்கையாக சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதேசமயம், புலிகளின் ஆயுதக் கொள்வனவுகூட ஒரு பயங்கரவாதச் செயல் என்பதாகச் சித்தரிக்கப்படுகிறது. இதற்காக ஈழத் துரோகிகள் கொலை செய்யப்படுவதும், புலிகளின் கப்பல், படகுகள் தாக்கி மூழ்கடிக்கப்படுவதும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

ஆனால், விடுதலைப் புலிகளோ பிரச்சினைகள் எல்லாவற்றையும் இராணுவ வலிமை கொண்டு தீர்த்து விட முடியும் என்று நம்புகின்றனர். ஈழத் தமிழர்கள் மீது தமது பாசிச ஒடுக்குமுறையை நீடிக்கும் அதேசமயம், வடகிழக்கில் தனது தலைமையிலான ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்தித் தருமாறு கோருகின்றனர். புலிகள் தற்போது நடத்தும் பேரங்கள் ஈழத்தமிழர்களுக்கு சுதந்திரமும் ஜனநாயகமும் கொண்ட ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சி அல்ல. புனரமைப்பு என்கிற பெயரில் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கம் - உலகமயமாக்கம் என்கிற வளையத்துக்குள் ஈழத்தமிழர்களை இழுத்துப் போடுவதுதான்.

இதற்குமுன்பு நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் போரில் குதித்தபோது இருந்த நிலைமைகள் இப்போது இல்லை. சர்வதேச அளவில் அவர்கள் மிகவும் தனிமைப்பட்டு விட்டார்கள். ஆயுத வியாபாரிகள் மட்டுமே அவர்களின் நட்பு சக்திகளாக உள்ளனர். எனவே, மீண்டும் போர் தொடங்கினால் உலகின் பல நாடுகள் நேரடியாகவும் கடுமையாகவும் தாக்கி ஒடுக்க முற்படுவார்கள். இந்தமுறை சமாதானப் பேச்சுவார்த்தை என்கிற வலைக்குள் புலிகள் சிக்கிக் கொண்டு விட்டார்கள்.

❑ ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## நெல் கொள்முதல் — பலன் யாருக்கு?

தமிழக அரசு இந்திய உணவுக் கழகத்தின் ஏஜெண்டாக இருந்து கொண்டு, காவிரிப் பாசனப் பகுதிகளில் நெல் கொள்முதலை நடத்தி வருகிறது. தஞ்சை, திருவாரூர், நாகப் பட்டினம் மாவட்டங்களில் இருந்து மட்டும், இதுவரை 2.10 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. காவிரிப் பாசனப் பகுதிகளில் 80 சதவீத சம்பா பயிர் கருகி விட்ட போதிலும், ஒவ்வொரு நாளும் கொள்முதல் நிலை யங்களுக்கு 150 டன் நெல் வருவது அதிகாரிகளுக்குப் புதி ராக இருக்கிறதாம். வெளிச் சந்தையில் நெல்லின் விலை சரிந்து விட்ட நிலையில், மண்டி வியாபாரிகள், தங்களிடம் இருப்பில் இருக்கும் நெல்லை அதிகபட்ச விலைக்கு அர சிடம் விற்று, இலாபத்தைச் சுருட்டிக் கொண்டு போவதாகக் கூறுகிறார்கள் விவசாயிகள். ஜெயா அரசு நெல் போக்குவ ரத்திற்கு இருந்த தடையை முற்றிலுமாக நீக்கிவிட்டதால், அண்டை மாநில வியாபாரிகள் கூட, விவசாயி என்ற போர்வையில் நெல்லை விற்றுச் செல்கிறார்களாம்!

## புதிய வடிவில் தீண்டாமை

மகாராஷ்டிரா மாநிலம் - ராய்காட் மாவட்டத்தில் மேல் சாதி வெறியர்களின் கட்டளையை மீறி பொதுக்குளத்தில் தண்ணீர் எடுத்ததற்காக, இரண்டு தாழ்த்தப்பட்டோர் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். சர்வஹரா ஜன அந்தோலன் என்ற அமைப்பு தாழ்த்தப்பட்டோரைத் திரட்டி, குர்கான் கிரா மத்தில் பொதுக்குளத்தில் நீர் எடுக்கும் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது. இதன்பின், அக்கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதியினர் தாழ்த்தப்பட்டோர் இறங்கியதால் குளம் அசுத்தம் அடைந்துவிட்டதாகக் கூறி, அக்குளத்தில் நீர் எடுக்காமல் புறக்கணித்து, தீண்டாமையைப் புதிய வடி வத்தில் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டனர்.

## இந்து ராஷ்டிரம் என்றால் ஊழல் ராஜ்ஜியம்

குஜராத் மாநிலம் - ஆனந்த் நகரில் உள்ள சி.என்.எஸ்.பி. கூட்டுறவு வங்கியில் 77 கோடி ரூபாய் அள விற்குக் கையாடல் செய்த குற்றத்திற்காக, பா.ஜ.க. எம்.பி. தீபக் படேல் கைதாகி, கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார். இந்த மோசடியின் சூடு தணியும் முன்பே, ரயில் பெட்டி எரிக் கப்பட்ட கோத்ரா நகரில் உள்ள பாஞ்ச்மஹல் கூட்டுறவு வங்கியில் 128 கோடி ரூபாய் அளவிற்குக் கையாடல் நடந் திருப்பது அம்பலமாகிவிட்டது. குஜராத் மாநில அரசில் பசு பாதுகாப்புத் துறை அமைச்சராக இருக்கும் பிரபாத் சௌகானும், மகேஷ் புரியா, புராக தரா என்ற இரு பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களும்தான் கூட்டுச் சேர்ந்து கொண்டு இக்கையாடலைச் செய்திருப்பதாக, அவ்வங்கியின் நிர்வாகக் குழு இந்த இந்துமதக் காவ லர்கள் மீது போலீசில் புகார் கொடுத் துள்ளது. குஜராத்தில் உள்ள கூட்டு றவு வங்கிகளில் 600 கோடி ரூபாய்க் கு மேல் ஊழல் நடந்துள்ளதாக, சேமிப்புதாரர்கள் சங்கம் குற்றம் சுமத் தியுள்ளது. ''மோடி'' ஆட்சி என்றால், அது கேடிகளின் ஆட்சியோ?



பிரதாப் சௌகான்



தீபக் படேல்

## காசுமீர்: போலீசு இராஜ்ஜியம்

பிரதமர் வாஜ்பாயி பாகிஸ்தானுக்கு நட்புக் கரம் நீட்டு வதாக அறிவித்ததையடுத்து, ஜம்மு - காசுமீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக், ''இந்தியா - பாக். இடையே பேச்சுவார்த்தை நடந்தால், அதில் காசுமீர் மக்கள் என்ன பங்காற்ற வேண்டும்?'' என்பது குறித்து, காசுமீர் மக்க ளிடையே ஒரு கருத்துக்கணிப்பு இயக்கத்தை நடத்தத் தொடங்கினார். இந்த இயக்கத்தின் இரண்டாவது நாளன்றே, யாசின் மாலிக்கும், அந்த அமைப்பைச் சேர்ந்த வேறு இரு தலைவர்களும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அமைதியான முறையில் கையெழுத்து இயக்கம் நடத்திய அவர்கள் மீது, ''சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட தாக'' போலீசு குற்றஞ்சுமத்தியது. இக்கைதைக் கண்டித்து நடந்த தன்னெழுச்சிய போராட்டங்களில் கலந்து கொண்ட மக்கள், போலீசுடன் நேரடியாகவே மோதினர். மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் திணறிப் போன காசுமீர் முதல்வர், மாலிக்கை உடனடியாக விடுதலை செய்வதாக சட்டசபையிலேயே அறிவித்து, தனது ஜனநாயக முகமூ டியைக் காத்துக் கொண்டார்.

## சாதிவெறியர்களின் ஆட்சி

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கீழ்சிறுணை என்ற கிரா மத்தில் ஓராண்டுக்கு முன்பாக, தாழ்த்தப்பட்டோருக்கும், மேல்சாதி வெறியர்களுக்கும் இடையே மோதல் நடந்தது. இது பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த பொழுது, மேல்சாதியைச் சேர்ந்த கஜபதி என்பவர் தாழ்த்தப் பட்டோருக்கு ஆதரவாகச் சாட்சி சொன்னார். இதனால் ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள், ஊர்ப் பஞ்சா யத்தைக் கூட்டி, கஜபதியையும், அவருக்கு ஆதரவாக நின்ற பன்னிரெண்டு குடும்பங்களையும் ஊரை விட்டே ஒதுக்கி வைத்துவிட்டனர். இத்துணைக்கும், கஜபதியின் மனைவி அந்தக் கிராமத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கிரசு: ஆர்.எஸ்.எஸ்.-இன் பெரியண்ணன்

ஆர்.எஸ்.எஸ்.இன் இந்துத்துவக் கொள்கையைத் தூக்கிப் பிடிக்கும் போட்டி நடந்தால், அதில், காங்கிரசு, பா.ஜ.க.வை ஓரங்கட்டிவிடக்கூடும். மத்தியப் பிரதேசத்தை ஆளும் காங்கிரசுக் கட்சி பசுக்களைக் கொல்வதைத் தடை செய்திருப்பதோடு, சமீபத்தில் பசுக் களைப் பராமரிக்கவும், பாதுகாக்க வும் ''காவ் சேவா ஆயோக்'' என்ற கமிட்டியை உருவாக்கியிருக்கிறது. மேலும், அம்மாநிலத்திலுள்ள ''கோசாலை''களுக்கு 37 இலட்ச ரூபாய் நிதி உதவியும் அளித்துள்ளது. இப்படிப்பட்ட ''காவி'' காங்கிரசை, பா.ஜ.க.வுக்கு மாற்றாக, 'மார்க்சிஸ்டு'கள் தூக்கிக் கொண்டு திரிகிறார்கள்.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO.42648/85
www.padippakam.com
Regn.No.TN/PMG(CCR)/621/03-05



# இதுதான் இன்றைய இந்தியா

இந்தப் படத்தில் நாம் காணும் (சென்னையில் உள்ள) ராதா கிருஷ்ணன் சாலை, இப்படி ஆள் அரவம் இல்லாமல் வெறிச்சோடிப் போய்க் கிடப்பதற்குக் காரணம், 'குடியரசு' தலைவர் அப்துல் கலாமின் வருகை. அவரது பாதுகாப்பு கருதி, அவர் சென்ற வழியெல்லாம் போக்குவரத்து தடை செய்யப்பட்டது; போலீசைத் தவிர, வேறு யாரும் தெருவில் நிற்கவோ, நடக்கவோ அனுமதிக்கப்படவில்லை. ஒரு "வி.வி.ஐ.பி." (மிக மிக முக்கியமான மனிதர்)-க்குப் பாதுகாப்பு கொடுப்ப தென்றால் சும்மாவா?

துப்பாக்கி ஏந்திய பூனைப் படை வீரர்களின் 24 மணிநேரப் பாதுகாப்பு; அவரை யாரும் நெருங்கி விட முடியாதபடி, அவரைச் சுற்றி வளையம் அமைத்து, கண் கொத்திப் பாம்பைப் போல, பார்த்துக் கொண்டிருக்கும் மஃப்டி போலீசின் கண்காணிப்பு; குண்டு துளைக்காத கார்; அவர் "வாக்கிங்" போக வெளியே வந்தால் கூட போக்குவரத்துத் தடை; அவர் ஏதாவது விழாவில் கலந்து கொள்ள கிளம்பினால் அவர் போகும் வழியெல்லாம் போலீசு படை; வெடி குண்டு பரிசோதனை; "மெட்டல் டிடெக்டர்" பரிசோதனை எனக் கலக்கி விடுகிறார்கள்.

'குடியரசு'த் தலைவர் அப்துல் கலாம் தொடங்கி நம்மூர் ஜெயா முடிய, பல அரசியல் தலைவர்கள், அவர்கள் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த உயர் இரகப் பாதுகாப்பை அனுபவித்து வருகிறார்கள். இந்து மத தீவிரவாதிகளான அசோக் சிங்காலையும், காஞ்சி சங்கராச்சாரியையும் 'மதச்சார்பற்ற' இந்திய அரசு தனது சொந்த செலவில் பாதுகாக்கிறது.

இவர்களின் பாதுகாப்புக்காக ஒவ்வொரு ஆண்டும் பல நூறு கோடி ரூபாய் வாரி இறைக்கப்படுகிறது. "பற்றாக்குறை" நிலவும் பொழுது, இவ்வளவு பாதுகாப்புச் செலவு அவசியமா என யாராவது கேள்வி எழுப்பினால், தீவிரவாத அபாயத்தைக் காட்டி, கேள்வி கேட்டவரின் வாய் மூடப்படுகிறது. இவர்களைப் பாதுகாத்தால்தான் நாட்டையே பாதுகாக்க முடியும் என்பதாக, இவர்களின் முக்கியத்துவம் ஊதிப் பெருக்கப்படுகிறது.



இதோ, இந்தப் படத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபுவைப் பார்த்துக் கதறியழும் இந்தப் பெண்கள், ஆந்திராவில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் சமீபத்தில் ஏற்பட்ட 'விபத்தில்' இறந்து போன 17 தொழிலாளர்களின் நெருங்கிய உறவினர்கள். சுரங்கத்தினுள் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால், நிலக்கரியை வெட்டி எடுத்துக் கொண்டிருந்த 17 தொழிலாளர்களும், தப்பிக்க வேறு வழியின்றி, நீரில் மூழ்கிச் செத்துப் போனார்கள்.

இந்தத் தொழிலாளர்கள் அநியாயமாக இறந்து போனதற்குப் பாதுகாப்பு குறைபாடுகள்தான் காரணம் என முதலாளித்துவப் பத்திரிகைகளே குற்றஞ்சுமத்தியுள்ளன. அப்படியென்றால் இது விபத்தல்ல; பச்சையான மனிதப் படுகொலை.

இந்தத் தொழிலாளர்கள் உயிரைப் பணயம் வைத்து, சுரங்கத்தினுள் இறங்கி நிலக்கரியை வெட்டி எடுக்கவில்லையென்றால், இந்தியத் தொழில்துறையே ஆட்டங் கண்டுவிடும். எனினும், இத்தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் அவசியமான சாதாரண பாதுகாப்பு வசதிகள் கூட மறுக்கப்படுகின்றன.

உலகமயமாக்கல் கொள்கையில், "தொழிலாளர் நலன்" என்ற அம்சத்தை இந்தியா மீது மேலை நாடுகள் திணிக்கக் கூடாது எனத் தகராறு செய்த 'சுதேசி' பத்திரிகைகள், தொழிலாளர்கள் பிணமாக மிதந்த பொழுது, உலகமயமாக்கலைப் பயன்படுத்தி எத்தனையோ பாதுகாப்பு வசதிகளைச் செய்து தந்திருக்க முடியும் என முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. இப்படி ஒரு நாலு ஆறுதல் வார்த்தை, ஒரு விசாரணை கமிட்டி, கொஞ்சம் நஷ்ட ஈடு எனக் கொடுத்து, இப்படுகொலையைப் பத்தோடு பதினொன்றாகப் பூசி மெழுகிவிட முயலுகிறது ஆளுங் கும்பல்.

"தீவிரவாதிகளால் ஆபத்து" என ஊளையிட்டு, தனக்கும், தனது குடும்பத்துக்கும் சகலவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து கொள்ளும் அதிகார வர்க்க ஒட்டுண்ணிக் கும்பல் ஒருபுறம்; நாட்டின் செல்வத்தை உருவாக்க, தனது உயிரையே பணயம் வைக்கும் தொழிலாளியை, சவக்குழிக்குள் தள்ளிவிடும் அவலம் மறுபுறம். இந்த ஓரவஞ்சனைக்கு நாம் முடிவு காணுவது எப்போது? ❑